-gistered No. M. 2330 'SIDDHANTHAM
Vol. 25—No. 11

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்கட னடி யேனையுந் தாங்குதல்
என்கட னபணி செய்து கிடப்பதே'

மலர் 25 | நந்தன கார்த்திகை 1952 நவம்பர் | இதழ்

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

சமாஜ அறிக்கை

சமாஜத்திற்கென கட்டிடம் அமைத்தல் போன்ற சில இன்றியமையாத செய்திகள் குறித்து ஆய்ந்து முடிவு செய்ய வேண்டியிருத்தலால் சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் 29-11-52 சனி மாலை 4 மணிக்கு, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையின் "குகானந்த நிலையத்தில்" நடைபெறும். அன்று போதிய கூட்ட நிறைவெண் இல்லாவிட்டால் அக்கூட்டம் அதே இடத்தில் அடுத்த நாள் 30-11-52 ஞாயிறு மாலை அதே மணிக்குக் கூடி வருவோரைக்கொண்டு முடிவு செய்யும். கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்தைக் கடிதவாயிலாக அறிவித்தருள்க.

சமாஜ செயற்குழு

சமாஜ செயற்குழு 30-11-52 ஞாயிறு மாலை 3-30 மணிக்குக் இராயப்பேட்டை குகானந்த நிலையத்தில் கூடும். யாவரும் அருள் கூர்ந்து வந்து தங்கள் கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உறுப்பினர் வரி (சந்தா)

1953 ஆம் ஆண்டு உறுப்பினர் வரி ரூபாய் மூன்றை 31-12-52 க்குள் நேரிலோ "மணியார்டர் மூலமோ சமாஜச் செயலாளருக்கு (53, திருவள்ளுவர் தெரு [ஜோன்ஸ்ரோடு] சைதாப்பேட்டை, சென்னை 15) அனுப்புதல் வேண்டும். அப்படி அனுப்ப இயலாவிட்டால் 1953 ஜனவரித்திங்கள் "சித்தாந்தம்" இதழை வி. பி. அஞ்சலில் (V. P. Post) அனுப்பப்பெறும். அதைத் திருப்பி அனுப்பாமல் அன்பர்கள் அருள்கூர்ந்து பெற்றுக்கொள்வார்களாக. 1953 ஆண்டு உறுப்பினராக இருக்க இயலாதோர் முன்னதாகவே கருணை கூர்ந்து அறிவித்து விடவும். தங்கள் உறுப்பு எண் (சந்தா எண்) குறித்து எழுதவும்.

19-10-52. குன்னத்தூர் புதூரில் இராமானுஜத்திருச் சபையில் புலவர் கு. திரு. நடேச கவுண்டர் "ஆண்டாள்" என்னும் பொருள்பற்றிப் பேச ஆசிரியர் தலைமை வகித்தார்.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 25	நந்தன கார்த்திகை 1952 நவம்பர்	இதழ் 11

நாட்டு ஒலி

1. கீழ்க்கலைப் படிப்பு: பண்டைக் காலத்திலே, நாட்டுமன்னர்கள் ஆட்சிபுரிந்தபோது, மக்கள் பேசிவந்த மொழிகளை அம்மன்னர்கள் போற்றிவந்தார்கள். மொழிப் புலமைக்குத் தக்க ஆதாவு கொடுக்கப்பட்டது. பொது மக்கள் ஓரளவு படிப்புப் பெற்று வந்தார்கள். பெரிய ஊர்களிலும், இராஜதானிகளிலும் கல்வித் திறமை எல்லா ராலும் போற்றப்பட்டது. அரசன் தன் திருவோலக்க மண்டபத்தில் கொலுவு வீற்றிருந்த காலத்தில் புலவர்களை வரவேற்றுத் தக்கப் பரிசுகளைக் கொடுத்துவந்தான். அந்த வகையில் மொழிகளுக்கு மிகுந்த ஆதாவு தாப்பட்டது. மொழிப்புலமையே தொழிலாகக் கொண்டு புலவர்கள் என்ற வகுப்பார்களும் வாழ்ந்து வந்தார்கள். இந்த வகையில் மொழிகளுக்கு மிகுந்த ஏற்றம் விளங்கியிருந்தது. தமிழ்நாட்டில் அதே முறையில் தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் தமிழை வளர்த்திவந்தார்கள். அதைப்போலவே தெலுங்கு, கன்னடிய மொழிகளை அந்தந்த நாட்டு அரசர்கள் பரிபாலித்து வந்தார்கள். வட நாட்டிலும் வடமொழியும், தேசியங்களும் போற்றப்பட்டு வந்தன!

நாட்டு மன்னர்கள் தங்கள் உரிமைகளை கொள்ளை கொடுத்த பிறகு நாட்டினுடைய ஆட்சி முகமதியர்களிடம்

சென்றது. முகமதியர்கள் தங்கள் மொழிகளாகிய பாரசிகத்தையும், உருதுவையும், போற்றினர்களே ஒழிய தேசிய மொழிகளைப் போற்றவில்லை. அவைகளை நாட்டுத் தலைவர்களும் மடாதிபதிகளுமே போற்றி வந்தார்கள். முகமதியர்கள் காலத்தில், தென்னாட்டில் தமிழ்மொழியை ஆதீனங்களும், பாளையப்பட்டுக்களுமே போற்றிவந்தன. தமிழினுடைய செல்வாக்கு அக்காலத்து அரசாங்கத்தாரிடம் குறைந்து போனாலும், நாட்டுப்புறங்களில், கிராம உபாத்தியாயர்களால் ஒருவாறு உயிர்ப்பிக்கப்பட்டது. ஆனால் பாளையப்பட்டுக்களும், மடாதிபதிகளும் இருந்த ஊர்களிலே உயர்தரப் புலமை போற்றிவரப்பட்டது. அந்தக் காலத்து நாட்டுமொழியின் ஆதரவு அரசாங்கத்தாருடன் இல்லாமற் போனபோதிலும் செல்வர்களிடம் ஒருவகையில் குறையாமலிருந்தது. இந்த வகையில் சாமானிய படிப்பைக் காட்டிலும், உயர்தரப் படிப்புக்குச் சிறப்பான ஆதரவு இருந்ததெனக் கூறலாம்.

இனி, முகமதியர்கள் ஆட்சி தொலையவே ஆங்கிலர்கள் நாட்டைக் கைப்பற்றி ஆண்டார்கள். ஆங்கிலர்கள் நாட்டுக்கு வந்த தொடக்கத்தில் வாணிபம் செய்து பொருளை ஈட்டுதலே தங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தபடியால் அவர்கள் மக்களுடைய படிப்பைப் பற்றி ஒரு சிறிதும் கவனம் செலுத்தவில்லை. ஆனால் நாள் செல்லச்செல்ல ஆங்கிலருக்கு நாட்டை ஆளும் வேலையும் வந்தது. நமது நாட்டிற்கு வந்த ஆங்கிலர்களோ மிகவும் குறைவானபேர். நாட்டை முழுதும் ஆளுவதற்கு துணைவர் பலபேர் வேண்டியிருந்தனர். அவர்களுக்கு ஆட்சிசெய்யும் பொறுப்பைத் தருவதற்காகக் கல்வி போதிக்கவேண்டி வந்தது. நாட்டுமக்களைத் தாழ்ந்த வேலைகளில் நியமித்துவந்ததனால் அவர்களுக்குத் தாழ்ந்த படிப்புத்தான் கொடுத்தார்கள். தொடக்கத்தில் நாட்டுமக்களுக்கு உயர்தரப்படிப்பு கொடுக்கவே யில்லை.

அந்தக் காலத்தில் மேல்நாட்டு அறிஞர்கள் சிலர் நமது நாட்டிற்கு வந்து கீழ்க்கலைகளை ஆராய்ந்தார்கள். அவைகளில் குறையாத பெருமை இருக்கக் கண்டார்கள். கீழ்நாட்டுக்

கலைகளை போற்றவேண்டுமென்று எண்ணினர்கள். அதற்காக வடமொழிக் கலாசாலைகள் காளிக்கட்டத்திலும், வாரணாசியிலும் தாபிக்கப்பெற்றன. அதுதான் கீழ்க்கலை ஆதாயவுக்கு முதல் முதலில் ஏற்பட்ட திட்டம் ஆகும்.

கீழ்க்கலை ஆராய்ச்சி என்பதில் வடமொழி ஆராய்ச்சியே மிகுந்திருந்தது. அதனோடு புத்தமத மொழியாகிய பாலி மொழி ஆராய்ச்சியுமிருந்தது. இவைகளைக் கற்றுக்கொடுத்த கல்லூரிகள் வடநாட்டிலேயே இருந்தபடியால் தென்னாட்டு மொழிகளுக்கு சிறப்பாகத் தமிழுக்கு யாதொரு ஆதாவும் கிடைக்கவில்லை. சமய இலக்கியங்களிலும் வடமொழி ஆறங்கங்களுக்கும் சிறப்பாக வேதாந்தத்திற்கும், ஆதாவு இருந்ததே ஒழிய தமிழ் நாட்டுச் சைவ, வைணவ சித்தாந்தங்களுக்கு ஆதாவு ஏற்பட்டிருக்கவில்லை. மேலும், அவ்வாறு தந்த கீழ்க்கலைப் படிப்பினல் ஆங்கிலர்கள் எதிர்பார்த்தபடி தங்கள் அரசியலுக்குத் தக்க பயிற்சி ஏற்படவில்லை. ஆகவே, வேறு வகையான படிப்புத்திட்டத்தை ஏற்படுத்தும் முறையை ஆங்கில அரசாட்சியார் சிந்திக்கத் தொடங்கினர்கள். அப்போது மெக்காலே என்ற ஆங்கில ஆசிரியன் இந்திய ஆட்சிச் சபையில் அங்கத்தினனாக இருந்தான். அவன் ஒரு புதிய திட்டத்தை வகுத்துத் தந்தான். கீழ்க்கலைப் படிப்பினல் யாதொரு பயனுமில்லை யென்றும், ஆங்கிலமே ஆட்சி செய்வதற்கு ஏற்ற படிப்பு என்றும் ஒரு திட்டத்தை வகுத்துச் செயல் முறைக்குக் கொண்டுவந்தான்.

அதுமுதல் இந்திய நாட்டில் ஆங்கில மொழி பொதுப்பள்ளிகளில் வைக்கப்பெற்று வற்புறுத்தப்பட்டது. இந்தியர்கள் ஆங்கிலப் படிப்புப் பெற்று அரசியல் அலுவல்களில் வேலை பெற்றார்கள். இவ்விதமாக இருபது ஆண்டுகள் கல்வி முறை நடந்து வர, இந்தியாவின் ஆட்சி கிழக்கிந்தியக் கம்பெனியிலிருந்து ஆங்கில மன்னர் வம்சத்திற்கு வந்தது. நாட்டில் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டன. மூன்று பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் சென்னை பல்கலைக் கழகம் ஒன்று. இக்கழகத்தை

ஓட்டிச் சென்னையிலும் பெரிய ஊர்களிலும் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளிலெல்லாம் ஆங்கில மொழியே போதிக்கப்பட்டது. கலைகளும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப்பட்டன. தமிழ்போன்ற நாட்டு மொழிகள் இரண்டாந்தர மொழியாகக் கற்பிக்கப்பட்டன. ஆகவே ஆங்கிலத்திற்கு இருந்த செல்வாக்கு நாட்டு மொழிகளுக்கில்லாமல் போய்விட்டது. அலுவல் வேண்டுமென்ற விருப்பம் கொண்ட மக்களும், ஆங்கிலத்திலேயே சிறந்து விளங்கினார்கள். நாட்டு மொழியாகிய தமிழ்மொழியின் வளர்ச்சி வரவரக் குறைந்து கொண்டுவந்தது. இவ்வாறு அறுபது ஆண்டுகள் சென்றன.

மேல்நாட்டு அறிவில் பயிற்சி பெற்ற மக்களுக்குத் தமது மொழிப் பயிற்சியே இல்லாமல் போய்விட்டது. அதை உணர்ந்த சில அறிஞர்கள் நாட்டு மொழிகளைத் தக்கவாறு பயிற்றுவிக்க வேண்டுமென்று உணர்ந்து கிளர்ச்சி செய்தார்கள். அதன் காரணமாகப் பல்கலைக் கழகச் சட்டம் திருத்தி அமைப்பதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. கீழ்க்கலை படிப்பைச் சிறப்பாகப் பயிலவேண்டும் என்றவர்களுக்குத் தனிப் பரிட்சையும், தனிப்பட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் முதலிய நாட்டு மொழிகளில் தேர்பவர்களுக்கு 'வித்துவான்' என்னும் பட்டமும், வடமொழியில் தேர்பவர்களுக்கு 'சிரோமணி' என்ற பட்டமும் ஏற்படுத்தப்பட்டன. மேலும் ஆங்கிலமும் படித்துக் கீழ்க்கலைகளிலும் ஒப்பியல் முறையில் தேர்ச்சிப்பெற்றவர்களுக்கு B.O.L. M. O. L. என்ற பட்டங்களும் வகுக்கப்பட்டன. இந்த மாறுதல் 1923-ம் வருஷம், 7-வது ஆக்ட்படி ஏற்படுத்தப்பட்டது. இந்தச் சட்டமே மீண்டும் 1929, 37, 40, 42, 43 என்ற ஆண்டுகளில் திருத்தப்பட்டு வலியுறுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி கீழ்க்கலைக் கல்லூரிகள் (Oriental Colleges) ஏற்படுவதற்கு விதிகள் இயற்றப்பட்டன. இதனால் கீழ்க்கலைக் கல்விக்கு இரண்டாம் முறை ஆதரவு கிடைத்தது.

2. கீழ்க்கலைக் கல்லூரிகள் : கீழ்க்கலைக் கல்விக்கு ஒரு திட்டமும், கல்லூரிகள் தாபிப்பதற்கு மற்றொரு திட்டமும் 1923-ல் ஏற்பட்டிருந்தும், பொதுமக்கள் அவைகளில் நல்ல அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. 25-ஆண்டுகள் ஆகியும் 25 - கல்லூரிகளே தோன்றின. இககல்லூரிகளிலும் பெரும்பான்மையானவை வடமொழிக் கல்லூரிகளே - அவைகளில் 14 வடமொழிப் பாடசாலைகளும், 6 அரபிப்பாடசாலைகளும், 5 தமிழ்ப்பாடசாலைகளும் ஏற்பட்டிருந்தன. தமிழ்க் கல்லூரிகளில் இரண்டில் வடமொழியும் கற்பிக்கப்படுகின்றது. 1945-வரையில் தனித் தமிழ்ப் பாடசாலைகள் மூன்றே இருந்தன. தற்போது இரண்டு பாடசாலைகள் மேற்கொண்டு ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, தற்போதுள்ள தமிழ்க் கல்லூரிகள் தென் ஆர்க்காட்டு மயிலத்தில் ஒன்றும், தஞ்சைவட்டத்தில் தஞ்சை, திருவையாறு, தருமபுரம், திருப்பனந்தாள் என்ற என்ற நான்கு இடங்களிலும், புதுக்கோட்டை மேலைச்சிவ புரியில் ஒன்றும், திருப்பதியில் ஒன்றுமாக, ஏழு இருக்கின்றன. தமிழ் வட்டங்களில் கோவை, நீலகிரி, சேலம், வட ஆர்க்காடு, திருச்சி, இராமநாதபுரம், நெல்லை, இவைகளில் ஒரு கல்லூரியும் கிடையாது. இவ்வட்டங்களில் உள்ள தமிழ் மாணவர்கள் 200 கற்களுக்கு அப்பால் சென்று தமிழ் கற்க வேண்டும். வித்துவான் பட்டத்திற்குப் படிப்பவர்கள் பெரும்பான்மையாக, நடுத்தர நிலைமையில் உள்ளவர்கள். இவர்கள் எல்லாரும் தமிழாசிரியர்களாக வர இருப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் 200 கல் தொலைவு சென்று படித்துப் பட்டம் பெறுவ தென்றால் மிகக் கடினம் அல்லவா ? ஆகவே மேலே கூறிய தமிழ்வட்டங்களிலுள்ள எளிய மாணவர்களின் பொருட்டு தமிழ்க் கல்லூரி ஒன்றை நிறுவி நடத்திவருவது ஒரு இன்றியமையாத செய்கை அல்லவா ?

3. மடாலயங்கள் செய்யக்கூடிய உதவி : பொதுவாகவே கல்லூரிகளை நிறுவி அவைகளை நடத்துவதென்றால், தனி மனிதர்களைக் காட்டிலும் அரசாங்கத்தாரும்

மடாலயத்தாரும் அச்செயலை ஏற்றுக்கொண்டு சரிவர நடத்துவது எளிது. தற்போதுள்ள கல்லூரிகளில் அந்த நிலைமைதான் காண்கின்றோம். அதுபோலவே கீழ்க்கலைக் கல்லூரிகளிலும் மடாலயங்களுடைய ஆதரவே மிகுதியாக இருக்கின்றது. தற்போதிருக்கும்படியான கீழ்க்கலைக் கல்லூரிகளில் பெரும்பான்மையானவற்றை மடாதிபதிகளே நடத்தி வருகிறார்கள். தமிழ்க் கல்லூரிகளிலே மயிலம், காந்தை, திருப்பனந்தாள், தருமபுரம் என்ற கல்லூரிகளை மடாலயங்கள் நடத்துகின்றன. திருப்பதியை தேவாலயத்தாரும், திருவையாற்றை அரசாங்கப்பகுதியாரும் நடத்துகிறார்கள். தனிமக்கள் ஒரு கல்லூரியை நடத்துவதற்கும் போதுமான ஆற்றலும், ஆதாவும் இருப்பதில்லை. மடாலயங்களிலும், தேவாலயங்களிலும் போதுமான சொத்தும், சுதந்திரமும், வருவாயுமுண்டு. பல்கலைக் கழகத்தின் பற்பல நிபந்தனைகளுக்குட்பட்டு செயலாற்றக் கூடியவர்கள் சமயநிலையங்களே ஆகும். இந்தக் காரணத்தினால் தான் தமிழ் நாட்டிலே மடாதிபதிகளாலே தமிழ்க் கல்லூரிகள் தொடங்கி நடத்தப்படுகின்றன. முன்னிருந்த அனுபவத்தைக்கொண்டு புதிதாக இனிமேல் கல்லூரி வைப்பவர்களும் நிரந்தரமாக வருவாய் வரக்கூடிய நிலையங்களை எதிர்பார்த்தே தீரவேண்டும். ஒரு தமிழ்க் கல்லூரி வைப்பதென்றால் பல்கலைக் கழகத்தார்கள் ஒரு இலட்சம் ரூபாயை எடுத்து வைக்கும்படிக் கேட்கிறார்கள். இப்பெருந்தொகை மடாலயங்களில்தான் எளிதாகக் கிடைக்கும். மூலதன மட்டுமேயன்றி ஆண்டுவருவாயும் அன்னார்கள் மூலம்தான் கிடைக்கும். மேலும் மடாலயங்கள் தமிழையும், சமயங்களையும் போற்றக்கூடிய பொறுப்பு வாய்ந்தவர்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்கள் மூலமாகத்தான் கொங்கு நாட்டில் ஒரு தமிழ்க் கல்லூரித் தொடங்க முடியும் என்று பொதுமக்கள் அறிந்தார்கள். அதனை உத்தேசித்தே ஒரு தமிழ்க் கல்லூரி தொடங்கும் முயற்சியும் எடுத்தாளப்பட்டது.

4. திருப்பேநூர்க் கல்லூரி : தமிழ்நாட்டில் உள்ள தமிழ்க் கல்லூரிகளில் மிகப் பெரியது மயிலம் கல்லூரி

ஆகும். அதை நடத்துபவர்கள் மயிலம் மடத்தார்கள். அம்மடத்துச் சுவாமிகள் பொம்மையபாளையத்து சிவஞான பாலைய மூர்த்திகள் ஆவார்கள். இவர்களுடைய மடம் பிரான்சு கவர்னர் டியூப்ளே காலத்திற்கு முதலிருந்தே விளங்கிக்கொண்டிருக்கிறது. முதல் மடாதிபதிகள் மிகுந்த வரப்பிரசாதி. அவர்களுடைய மாணுக்கர் தான் புகழ் பெற்ற தமிழ்ப்புலவர் சிவப்பிரகாச சுவாமிகள். அவ ருடைய மாணுக்கர் திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள். அந்தப் பெரியார் கொலை மறுத்தல் முதலிய நான்கு பெரிய நூல்களை அருளிச் செய்துள்ளார்கள். அவர்கள் ஐக்கிய மடைந்த ஊர் பேரூர். அதில் அவருடைய திருமடம் வெகு புகழ்கொண்டு இருக்கிறது. ஆண்டுதோறும் மாசிமகத்தில் குருபூஜையும், அறிஞர் கூட்டமும் நடைபெறுகின்றன. அம்மடத்திற்குச் சேர்ந்த சின்ன சுவாமிகள் வித்வான் பட்டம் பெற்றவர்கள். முதன்மை மடமாகிய மயில மடத் தாரைப் போலவே மாணுக்க மடமாகிய சாந்தலிங்க சுவாமிகள் மடத்திலும் ஒரு தமிழ்க் கல்லூரி நிறுவவேண்டு மென்பது பெரிய சுவாமிகளுடைய நோக்கம். சின்ன சுவாமிகளும் அதே கொள்கையில் ஈடுபட்டு மும்முரமாகப் பணி செய்துகொண்டு வருகின்றார்கள். மடத்தில் வேண் டிய இடவசதி உண்டு. வருவாயில் ஒரு தொகை மீதிப் படுத்தவும் ஆகும். இவ்வசதிகளைக் கொண்டு ஒரு தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தும் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது.

சுளது மாதம் 16-ம் தேதி, கோவைப் பெரியார்கள் 16-பேர் கூடி சாந்தலிங்க சுவாமிகள் மடத்தை ஒட்டி ஒரு கல்லூரி ஏற்படுத்துவதென்றும், அதற்கு வேண்டிய மூல தனப் பொருள் உதவி தாங்கள் செய்வதாகவும் உறுதி கூறி னர்கள். பிறகு 18-ம் தேதி திருப்பேரூரில் ஸ்ரீ பட்டீசுரர் திருக்கல்யாண மண்டபத்தில் நடந்த திரு. டாக்டர்-சண்முகம் செட்டியார் அவர்கள் மணிவிழாவின்போது கல் லூரியைப்பற்றி வெளியிடப்பட்டது. மடத்தார் செய்த தீர்மானங்களைப் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அத் தீர்மானங்களைப் படித்த ராஜா சர். முத்தைய செட்டியார்

அவர்களும் அதனை ஆதரித்தார்கள். இவ்விதமான நல்ல நாழிகையில் பேரூர் கல்லூரி தொடங்கப் பெறுகின்றது. கல்லூரி விதிகள் முதலியவை ஆராயப்படுகின்றன. இறைவன் திருவருளால் தமிழ்க் கல்லூரி தோன்றி, வளர்ந்து, பெருகுவது ஆகுக !

திருபேரூர் கல்லூரியைப் போலவே ஏனைய வட்டங்களிலும் தமிழ்க் கல்லூரிகள் வைக்கப்படவேண்டும். அதற்காக அந்தந்த வட்டத்துத் தமிழ்ப்பெருமக்கள் முயற்சிகள் எடுத்துக் கொள்ளுவார்களாக. தமிழ்க் கல்லூரிகள் ஏற்பட்டுவிட்டால் இசைக் கல்வியும் சமயக் கல்வியும் அவைகளில் ஏற்படுவது இயல்பு அல்லவா ? ஆகவே, பொதுமக்கள் இவ்விதமான இயக்கத்தில் மிகவும் ஈடுபடுவார்களாக!

சென்னை இறைபணி மன்றத்தாரின் அருணை யாத்திரை

[அ. தா. பா. திருஞானசம்பந்தம்]

புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கம் தமிழ் நாட்டவர்க்குப் புதிதல்ல. யாத்திரையின் வாயிலாக உலகியல் அனுபவங்களையும், இறையருட் பேற்றையும் பெற்றவர்களே நம் ஆன்றோர்கள். தமிழ் நாட்டுத் திருத்தலங்கள் மட்டும் அன்றி வடநாட்டுத் திருத்தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டுப் பண்செறிந்த பாமாலைகள் பல பாடி, கோகழியாண்ட குருமணிதனக்குப் பூமாலையாகச் சூட்டியவர்களே நம் சமய முதலிகளாவர். அண்மைக் காலத்தே, யாத்திரைமேற் கொள்ளும் வழக்கம் அருகியதே போல் நம்புறக்கண்களுக்குத் தோற்றமுறினும், அஃது ஆலெனத் தழைத்து, அறுகென வேன்றி மக்களின் உள்ளத்

தில் வழியுள்ளதென்பது வெள்ளிடைமலை. தற்பொழுதும் யாத்திரை என்று குறிப்பிட்டால், இராமேச்வரத்திற்குச் செல்வதையோ, அன்றி காசியம்பதிக்குச் செல்வதையோ குறிப்பர். இது காலத்தால் மாறிய வழக்கு. யாத்திரை மேற்கொள்வோரில் குறிப்பிட்டுச் சேரவேண்டிய ஓர் தலத்தைச் சேர்ந்து, இடையில் உள்ள தலங்களைப் பற்றிய எண்ணம் எழாது மீள்வோரும் பலராவர். இங்ஙனம் சென்று வரும் யாத்திரையால் என்றென்றும் பயன் விளையாதென்க.

திருத்தலம் – திருவண்ணாமலை

சைவ சமயம் என்பதைப் பற்றி அறியவேண்டுமென்ற அவா ஒருவர் உள்ளத்தில் எழுங்கால், பெரும் சமயச் சீரெலாம் தழைத்தெழுந்த அருணையம்பதியைப் பற்றிய நினைவு முதற்கண் எழும் என்பதில் ஐயமும் உண்டாமோ? சமயப் பெரு நூல்களில் நூல் வல்லார் பேசும்பொழுது, ஆரூரில் பிறக்க முக்தி என்பர்; தில்லை சென்று வழிபடின் முக்தி என்பர்; காசியம்பதியைச் சார்ந்து உயிர் நீப்பின் முக்தி என்பர். அருணை என்றிடின் நினைக்க முத்தி என்பர். குறிப்பிட்ட ஊரில் பிறப்பது என்பது மிகவும் கடினம். அதைவிடக் கடினமானதும், நிச்சயமில்லாததுமான ஒன்று குறிப்பிட்ட ஊரில் உயிர் நீப்பதென்பது. குறிப்பிட்ட ஓர் ஊர் சென்று பெருமானை வழிபட்டு வருவது என்பது சற்று எளிதுதான். அதைவிட எளியதையல்லவா உள்ளம் நாடும். அத்தகைய எளிமையானதே ஓர் குறிப்பிட்ட நன்னகரை நினைத்தல் என்பதாம். இக் கருத்தையே சீலத்தாற் சிறந்த சிவப்பிரகாச சுவாமிகள் சோணசைல மாலையில் குறிப்பிடுவதை நம்மனோர் நயங் கண்டு இன்புறுதல் நலமேயாகும். அருணையம்பதியைச் சிறப்பித்துப் பாடவந்தவர்களான, ஞானசம்பந்தர் பெருமானும், அப்பர் பெருமானும் யாங்ஙனம் இசைத்துள்ளனர் என்பதைக் காண்க.

சென்னை - இறைபணி மன்றம்

" பிழைத்த பிடியைக் காணாதோடிப் பெருங்கை மதவேழ
மழைத்துத் திரிந்தங் குறங்குஞ் சாரலண்ணா மலையாரே."

" இறந்தான் காட்டி யருளாயென்று தேவாவர் வேண்ட
வறந்தான் காட்டியருளச் செய்தா ரண்ணா மலையாரே "

—திருஞானசம்பந்தர்.

" யாக்கை நெரித்த வண்ணாமலையுளா யமரரேறே
சிரத்தினால் வணங்கியேததித் திருவடி மறப்பிலேனே "

" அல்லல் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்ல வாயின நம்மை யடையுமே."

—திருநாவுக்கரசர்.

தருமம் மிக ஓங்கி வளரும், சென்னையம்பதியிலே இறைபணி மன்றம் என்றொன்று தோற்றுவிக்கப் பெற்றுள்ளது. அம்மன்றம் தன்னகத்தே தகுதிவாய்ந்த பெருமக்களைக் கொண்டிலங்குகிறது. அம்மன்ற ஞாயிறு அடியார் திருக்கூட்டத்தார், சில புண்ணிய தலங்களுக்கு, யாத்திரை மேற்கொண்டு செல்வதாகத் தெரிகிறது. அக்குழுவினரே சமயப் புகழ்பெற்ற திருவண்ணாமலைக்கு யாத்திரை மேற்கொண்டு வந்தனர். இவர்கள், தங்களின் வருகையை முன் கூட்டியே, தவத்திரு.ஈசானஞானதேசிக மடத்தைச் சார்ந்த இராமநாத அடிகளாருக்கு அறிவித்திருந்தனர். அத் திரு மகனார், இறையருட் பணியில் பெரும் பங்கு கொண்டு உழைப்பவரும், அண்ணாமலையார் கோவில் அறக்காப்பாளருமான திரு. ச. சு. வ. சா. முத்தையா செட்டியாரவர்களின் உலையா உழைப்பின் துணைகொண்டு குழுவினர்க்கு வேண்டுவன செய்தமைத்தார்.

அடியார்கள் கூட்டத்தின் வருகை

அடியார் திருக்கூட்டத்தினர் 1952 செப்டம்பர் 30-ந் தேதி யன்று, பொழுது புலரும் பொழுது, சென்னையிலிருந்து தனிப் புகை வண்டியில் திருவருணை வந்து சேர்ந்

தனர். அருணையை யடைந்தவுடன் அடியார்கள் கூட்டம், விண்ணளாவ அண்ணாமலையான் பெயரை உச்சரித்தனர். அது சமயம் அடியார்களை வரவேற்கச் சென்றிருந்த பெரு மக்களின் வாயெல்லாம் தன்னை மறந்து இறைவன் திரு நாமத்தை வருக்க ஆரம்பித்தன. குளிர்ந்த காலைவேளையில், புறம்பு எண்ணங்கள் உள்ளத்தில் எழாதிருக்கும் பொழுது, இறைவன் திருநாமத்தை செவி வாயாகப் பெற்று உண் டக்கால், உள்ளம் அடைந்த உவகை சொல்லத்தாமன்று. இத்தகைய திருக்கூட்டம் எப் பெரியாரைத் தலைமையேற்று வந்தது? குன்றம் எறிந்தும், குன்றப் போர் செய்தும், அமரர் இடர்களைந்தும் என்றும் இளைய தோற்றத்துடனே யேயுள்ள முருகப் பிரானின் குன்றுப் பெருமையில் ஈடு பட்டு வாழ்பவரான திருப்புகழ் மணியவர்கள் தலைமை யேற்றுதான். இவரைச் சார்ந்தே ஐநூறுக்கு மேற்பட்ட அடியார்கள் சென்னையினின்றும் கலந்து கொண்டனர். அதில் பாதிக்குக் குறைவில்லாமல் தாய்மார்கள் என்னின், அத்திருக் கூட்டத்தின் பெருமையை என்ன என்பது? தாய்மார்கள் பகுதிக் கூட்டமே சிறந்த முறையில் அமைந் திருந்தது. எழிசையால் இவர்கள் பரப்பிய தமிழின்னிசை இன்றும் காதில் ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. புகை வண்டி நிலையத்தருகிலேயே அடியார் கூட்டம் முப்பிரிவாகப் பிரிந்தது. முதற்குழுவில் திருப்புகழ்மணியவர்களும், இள வழகனாரவர்களும், மற்றும் சைவமெய்யன்பர்களும் கலந்து கொண்டனர். இரண்டாம் பிரிவில் தயைமிக்க தாய்மார்கள் கலந்துகொண்டனர். மூன்றும் பிரிவில் நடுத்தர வயதுடை யோர்களும், இளைஞர்களும் கலந்து கொண்டனர். இத்தகு அன்பர் குழுவை வரவேற்கப்பட்டால் அணிசெய்யப்பெற்ற கரியின் மணி ஓசை முன்வர, அஃது பின் வரவும், அதன் பின் குழலொலியும் யாழொலியும் முழங்க, மேள தாளங் கள் அடிக்க, அதன்பின் நகரத்தின் தகுதி வாய்ந்த பெரு மக்கள் புடைசூழ அருள்திரு அடியர் கூட்டம் அணி அணி யாக வந்த காட்சி கண்படைத்தவர் காணத்தகுந்ததே யாகும். குழுவினரில் ஒவ்வொருவரும் அடையாளச் சீட்

டொன்று அணிந்திருந்தனர். வாவேற்புக் குழுவினர் அவர்கள் அனைவரையும் சாதுக்கள் சத்திரத்திற்கு அழைத்து வந்தனர். காலை சிற்றுண்டி தயாராக இருந்தது. காலைச் சிறுவேலைகளுக்குப் பின் குழுவினர் சிற்றுண்டி முடித்தனர். அடியார்கள் தொகை மிகுதியாயிருந்தபடியால், எண்ணியதை எண்ணியாங்கு செய்துகொள்ள இயலவில்லை.

நிகழ்ச்சி நிரலில் காலை 9 மணிக்கு மாடவீதி வழியாய் இறைவன் திருநாமத்தைப் பாடிச் செல்வது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. காலங் கடந்து குழுவினர் புறப்பட்டனர். வெங்கதிரோன் காய்ந்தபடியே யிருந்தான். குழுவினர் மாடவீதி சுற்றி வருங்கால், மிகவும் களைத்துப் போயினர். ஒருவாறு மாடவீதி சுற்றி வந்து, அடியார் குழு அண்ணுமலை அண்ணலின் திருக்கோவிலுக்குச் சென்றது. பெருமானுர்க்கு நற்பூசை முடித்து, வழிபட்டு அனைவரும் வந்திறங்கிய இடத்தைச் சார்ந்தனர். உண்டிக்கு நேரமாகியது. அனைவரும் பசிப்பிணியைப் போக்கிக் கொண்டு உண்ட இளைப்பைப் போக்கினர் சிலர்; ஊரில் காணவேண்டியன எவை என்பதில் முனைந்திருந்தனர் சிலர்; சொந்த காரியத்தைச் சாதிக்க முற்பட்டவர் சிலர்; வேடிக்கையாக விநோதக் கண்கொண்டு ஊர் சுற்றி வந்தவர் சிலர். இவ்வாறு தங்கள் தங்கள் உள்ளம் வகுத்துரைத்த வழியாய் நடந்தனர். மாலை 3க்குத் திருக்கூட்டம், அண்ணுமலையார் கோவிலின் கீழ்ப்பால் உள்ள அறிஞரை அழைக்கும் சக்தி விலாச சபையில் கூடும் என்று நிகழ்ச்சி அறிவித்தது. அறிவித்திருந்தபடி நற்கூட்டம் கூட இயலாது போயிற்று. மணி 4½ இருக்கும். கூட்டம் திரள் திரளாய்க் கூடியிருந்தது. முன்கூட்டியே அறிவித்த முறையில், தக்க அறிஞர்கள் தகுதிவாய்ந்த காரணத்தால் கலந்து கொள்ளாமல் போயினர். திருப்புகழ் மணியவர்களும் வந்து சேர்ந்தார். அவர் வருகைக்குச் சற்று முன்பாக இளவழகனுரவர்கள் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசிக்கொண்டிருந்தார். அதற்குப்பின் திருப்

புகழ்மணி யவர்கள் இறைவன் அருட் பேற்றிற்குகந்த கருத்துக்களைக் கூறும் பாடல்களைப் பாடி, தனக்கே உரிய ஒரு தனித் தொனியில் அதற்குரிய கருத்துக்களைக் கூறி வந்தார். பொழுது சாயும் நேரத்திற்கே சபை முடிந்தது. இறைவனை வழிபட அடியார் குழு கோயிலுக்குள் சென்றது. உரிய நேரத்தில் தங்குமிடத்தைச் சார்ந்தனர். அன்று மாலையே குழுவினர் சென்னை செல்வதாக ஏற்பாடு செய்து வந்திருந்ததால், இரவு உண்டி கொண்டு, சென்னைக்குத் தனிப்புகை வண்டியில் புறப்பட்டனர். அன்பொடு அருளும் நிறைந்த அடியார் பெருங் குழுவில் கலந்து கொள்ளும் சில்லோருடைய மனம் வம்புத்தனத்திலும், வக்கணையாக ஈடுபடுகிறதை நோக்குழி உள்ளம் கொள்ளும் வருத்தம் வாய்விட்டுச் சொல்லமுடியாது.

இத்தகையதோர், திருக்கூட்டம் புறப்பட்டு யாத்திரையாய் வருங்காலத்து, 7ம் நூற்றாண்டின் நினைவன்றோ உள்ளத்தில் தோற்றுகிறது? பரசமயக்கோளரியான, ஞானசம்பந்தப் பெருமானார் தெருக்கள் தோறும் எழிசையால், இசைப் பயனால் தமிழ் பரப்பிச் செல்லுங்கால், அவரைச் சார்ந்து தீந்தமிழ்ப் பாடல்களுக் கேற்ப, நறுந்தமிழ்ப் பண்ணமைத்து யாழ் வாசிக்கவும், அதன்பின் அருளே உருவாய்த் தோன்றிய அடியார் பெருமக்கள் புடைசூழச்சென்ற காட்சி மனத்திடையே வந்து உய்விற்கு வழிகோலுகிறதன்றோ! இத்தகைய திருக்கூட்டங்கள் யாத்திரைமேற்கொண்டு செல்லுங்கால், அந்தந்த நகர மக்களும் பங்கெடுத்துக்கொண்டு, நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தும், நிதி குறைந்தவர் காசுகளருளியும், அதுவுமற்றவர் வாழ்த்துரை தந்தும் போற்றுதல் நன்று. வாழ்த்துரை தாராமற் போனாலும், வசைமொழியாதிருத்தல் நலம். இங்ஙிலை வளர்வதன்றோ முயற் கொம்பாயுளது. காகம் உறவு கலந்து உண்ணக் காண்பதைப் போல, சேரவாரும் சைவ சமயிகளே என மனமுவந்து அழைப்பினும் வந்து சேரவும்

அவர்களுக்குத் தட்டுங் கசப்பு வேம்பைவிட மிகுதியா யுள்ளது.

"வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர்" என்று முருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுவதொப்ப, அடியார் கூட்டம் அருணையில் வானம் சிறக்காதிருப்பதைக் குறித்து, அண்ணலிடம் முறையிட்டதனுல், அன்று நல்ல மழை பெய்தது என்பது குறிப்பிடத் தகுந்தது. "உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்" என்று அவன் திருத்தாள்களுக்கு அடைக்கலப்படின், நம்மனோர் எல்லா வற்றையும் பெறுதல் சாலும். கண் அவனைக் கண்டு, வாய் அவனைப் பண்பாடி, இருகாது அவன் சீர் கேட்டு, மனம் அவன் திருப்பாதங்களைச் சூழ்தலே பிறவியின் பயனாகும். ("All things are wrought by prayer."—Tennyson.) "நாம் எண்ணிய எல்லாம் இறைவன் திருநாமத்தை இசைத்தலால் பெறலாம்" என்ற மேலைநாட்டுக் கவிஞரான டெனிசன் வாக்கை நோக்குமின்!

மதிப்புரை

திருக்குறட் சொல்லடைவு

ஆசிரியர் திரு. தமிழ்மணி, சாமி வேலாயுதம் பிள்ளை. பி. ஏ., எல். டி. 'மொழியரசி' முதலிய நூல்களின் ஆசிரியர் உயர்ந்த பதிப்பு. விலை ரூபாய் ஏழு. ஆசிரியரிடம் கிடைக்கும்.

இந்நூல் ஓர் அரிய ஆராய்ச்சி நூல். திருக்குறளில் ஆராய்ச்சி செய்பவர்களுக்கு இந்நூல் மிகவும் பயன்படும். திடீரென்று பார்ப்பவர்களுக்கு இந் நூல் ஒரு அகராதி போலக் காணப்படினும் உள்ளே நுழைந்துபார்த்தால் கணக் கற்ற சிற்றுரைகளும், பேருரைகளும், நுண்ணுரைகளும்,

ஆராய்ச்சி யுரைகளும் காணப்படுகின்றன. பண்பாட்டில் சிறந்த மேல்நாட்டார்கள் தங்களில் இருந்து போந்த பெரும் புலவர்கள் இயற்றிய நூல்களுக்குச் சொல்லடைவு கண்டு விளக்கி வெளியிட்டாற்போலத் தமிழ்ப் பெரு நூலாகிய திருக்குறளுக்கு இவ்வாசிரியர் இவ்வரிய ஆராய்ச்சி உரையை வெளியிட்டுள்ளார்கள். விவிலிய நூல், செகப்பிரியர் இலக்கியம், இவைகளுக்கு மேல் நாட்டவர்கள் கண்டிருக்கும் ஆராய்ச்சியே இங்கே காண்கின்றோம். ஒவ்வொரு சொல்லும் இன்னின்ன பொருளில் வந்துள்ளது என்பதை நன்கு விளக்கியுள்ளார். பொதுவாக உலக வழக்கில் வரும் பல வழக்குச் சொற்களுக்கும், திரிபுச் சொற்களுக்கும், திசைச் சொற்களுக்கும் இந்நூலில் விளக்கம் காணலாம். எடுத்துக் காட்டாக ஒரு சொல்லின் பொருளைக் கொண்டு இதனை விளக்குவோம். இந்நூல் 29-வது பக்கத்தில் 530-வது எண் கொண்ட சொல் 'இட்டிது' என்பது ஆகும். அதனை இட்டு + இ + து, என்று பிரித்து இட்டிடை என்ற சொல்லை ஒப்புநோக்காக வைத்துச் சிறியது என்று பொருள் தந்து அச்சொல் 478 என்ற குறளில் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. 478 என்ற குறள்,

" ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை "

என்பது. இதனைப் பதம் பிரித்து எழுதினல்,

" ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை
போகு ஆறு அகலா கடை "

என்பது ஆகும்.

இதில் 'இட்டிது' என்பதற்குச் சிறியது என்பது பொருள். மற்றச் சொற்கள் வெளிப்படை. இந்த ஒரு சொல்லிற்குப் பொருள் கண்டால் முழுக்குறளுக்கும்

பொருள் கிட்டிவிடும். ‘இட்டு’ என்ற சொல் சிறிது என்ற பொருளில் பல இடங்களில் வந்துள்ளன. ‘இட்டிகை’ ‘இட்டேரி’ என்ற சொற்களில் காண்க. இட்டேரி என்பது ஒரு திசைச்சொல். கொங்கு நாட்டில் பெரும்பாலாக வழங்கப்படும் ஒரு சொல். சிற்றூர்களுக்குப் போகும் குறுகிய வழிகளுக்கு இட்டேரி என்ற வழக்கப் பெயர் இருக்கின்றது. இதனை ஆராயாத புலவர்கள் ‘இட்டேரி’ என்னும் சொல் இரு வேலி என்ற கூட்டுச் சொல்லின் திரிபு என்றும், இரண்டு வேலிகளுக்கு இடையில் செல்லும் வழியை அது குறிக்கிறதென்றும் கூறுவர். அவ்விதமான விளக்கம் சரியானது அல்ல என்று இந்தச் சொல்லடைவு நூல் எடுத்துக்காட்டுகிறது. இந்த எடுத்துக் காட்டைப் போலக் கணக்கற்ற எடுத்துக் காட்டுகளை இந்நூலில் காணலாம். தமிழறிஞர்கள் இந்நூலைப் பெரிதும் பாராட்டுவார்களாக. சிறப்பாகக் கூறுமிடத்துத் தமிழ்நாட்டுப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் இந்நூல் கண்டிப்பாக இருக்கவேண்டும். இந்நூலாசிரியர் எடுத்துக்கொண்ட உழைப்பிற்கும் பொருட் செலவிற்கும் தமிழ் மக்கள் இந்த உதவியாவது செய்யமாட்டார்களா ?

> “ நன்றி மறப்பது நன்றன்று—நன்றல்லது
> அன்றே மறப்பது நன்று.

என்ற திருக்குறளுக்கிணங்கத் தமிழ் மக்கள் இவ்வாசிரியருக்கு நன்றி செலுத்துவார்களாக !

சைவ சமய நிலையங்களின் தற்கால நிலை*

[மா. சிவகுருநாத பிள்ளை]

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே.

—அப்பர் - திருத்தாண்டகம்

தெய்வமணக்கும் திருக்கோயில்கள் பலவற்றைப் பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறையப்பெற்றது நம் நாடு. இதனாற்றான், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவபெருமான் தென்னாடுடைய சிவனாய்த் திகழ்கின்றான் என்பர். பண்டைக்கால முதல் இங்குள்ள மக்களது வாழ்வு பொதுவாகச் செந்நெறியிலேயே நிலைத்து நின்று நடந்து வந்துள்ளது. ஆனால் அந்நிலை இப்போது வரவர மாறி வருவது வருந்தத்தக்கது. கணக்கற்ற நோய்களும், பசிப் பிணியும், கால மழையின்மையும், இன்னும் அரசாங்கத்தையே எதிர்க்கும் பலவிதப் பூசல்களும் மிகுத்து வருகின்றன. இதன் மூலகாரணம் இன்னதென உணராது, நம்முள் பலர் பலவாறாய்ப் பேசுகிறோம். அரசாங்கமும் எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டும் குறை தீர்ந்தபாடில்லை.

இம்முயற்சிகள், பேச்சுகள் யாவும் "குடல் எற்றம் எனத் தெரியாது கோடி ரூபாய் செலவு" செய்த கதையை ஒத்துள்ளது.

---

*24—12—51ல் குன்றக்குடி சைவர் மாநாட்டில் உயர் திரு. ஒ. பி. இராமசாமி ரெட்டியாரவர்கள் தலைமையில் 'சிதைவுற்ற சிவாலயங்கள்' என்னும் தலைப்பில் பேசியதைத் தழுவி எழுதியது.

ஓர் நாடானது எப்போது இவ்வித அல்லல்கட்குட் படும் என்பதைத் திருமூலர் தமது திருமந்திரத்தில் திருக் கோயில் இழிவு என்னும் பகுதியில் விளக்கியருளியுள்ளார். அத் திருமந்திரப் பாசுரங்களாவன :

தாவர லிங்கம் பறித்தொன் றிற் றாபித்தால்
ஆவதன் முன்னே அரசு நிலைகெடும்
சாவதன் முன்னே பெருநோ யடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. 1

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசனை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே. 2

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே. 3

முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள;வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே. 4

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. 5

மேலே காட்டியுள்ள தொல்லைகளும் அவை உண்டாவதற் குரிய காரணங்களும் இப்போது நம் நாட்டில் புலப்படு நிலைக்கு மிகவும் ஒத்துள்ளனவல்லவா ?

இவ்வகைக் காரணங்களை நாம் எடுத்துரைப்பின் சிலர் எள்ளி நகையாடலாம். "நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"* என்ற வாதவூரடிகள் வாசகத்திற் குரியவர்கள் வேறு யாதுதான் செய்வர் !

---

* திருவாசகம் போற்றித் திருஅகவல்.

தற்காலத்தில் பெருநிதி படைத்த திருக்கோயில்கள் கூட, பலவிதக் குறைபாடுகளுடன் காணப்படுகின்றன. பலவிடத்தும் பல விழாக்கள் நிறுத்தப்பட்டுள்ள காரணத்தால் மக்களுக்குப் பக்தி சிரத்தை குன்றியதுடன், அவ் விழாக்களது சிறப்பிற் காதாரவாயிருந்த பெரும் வருமானங் களும் மிஞ்சியுள்ளன. அதன் தொடர்புடைய மண்டபங் கள், சிற்பம் நிறைந்த தேர்கள், இரதங்கள், வாகனங்கள் முதலியன பயனின்றி அழிந்து பல இடங்களிலும் இரங்கத் தக்க நிலையில் இருந்துவருகின்றன. திருக் கோயில்களிலும் நவநாகரீகம் உள்நுழைந்து விட்டது. பூசனை முறை முதலியனவும் பழமையான நெறிதவறிப் பலவிடங்களில் நடைபெறுகின்றன. இக் குறைபாடுகள் பலவற்றிலும் வருந்தத்தக்கதாக இருப்பது சிறப்புடைய கோயில்களில் பல சிதைந்து அழிந்து வருவதாகும். இத்தகைய கோயில்களைத் தரிசித்துத் தங்கள் குறைபாடு களை ஈசனிடம் விண்ணப்பித்து அவற்றைப் போக்க எண் ணங்கொண்டு செல்வோர் இதனை மறந்து, முதலில் இவ் வரும்பெருங் கோயில்களின் பெருங்குறை என்று தீருமோ என்றே ஏங்கவேண்டியவராகின்றனர்.

இவ்வாறு இத் திருக்கோயில்கள் சில நூற்றூண்டு கட்கு முன் தொடங்கி சிதைந்து அழிந்துவருங் காரணங் கள் : (1) பிறமத வெறி, (2) வெள்ளப் பெருக்கு, (3) சொத்துக்கள் பராதீனம், (4) மக்கள் கவலை யின்மை முதலி யன ஆகும்.

1. பிறமத வெறி

நம் சமயத்திற்குப் பண்டைநாள் முதல் இதுவரை பிற மதத்தவர்களால் இடை இடையே வந்த இடுக்கண் பல. அவை அவ்வப்போது தோன்றிய அடியார்களால் களையப்பட்டு வந்தன. சைன, புத்த மதத்தவர்களால் நம் சமயத்திற்குற்ற இன்னல்களைச் சம்பந்தர் அப்பர் வரலாற்றி னின்றும் (பழையாறையில் சமணர்கள் மறைத்த இலிங் கத்தை அப்பர் உண்ணுவிரதமிருந்து மீட்ட வரலாறு முதலியவற்றுல்) அறிவோம். ஆனல், இவர்களது எதிர்ப்பி

னும் மிகக்கொடுமையானது முஸ்லிம்களது படையெடுப்பாலானதாகும்.

நம் தேசத்தின்மீது முதன்முதல் பன்முறை படையெடுத்து வந்து நம் நாட்டின் பெருஞ் செல்வத்தைக் கொள்ளையடித்த கஜினி முகம்மது என்னும் ஆப்கானிய மன்னனது மதவெறியை நாம் நன்கு உணர்வோம். அவன் பாழ்படுத்திய பெருஞ் செல்வம் நிறைந்த *சோமநாதபுரக் கோயில் சம்பவத்தைச் சரித்திர பாடத்தில் படிக்கும் போது நம் மனநிலை கலங்குகிறது. அவனால் பாழ்படுத்தப்பட்ட அத் திருக்கோயில் நம் தேசப்பெரியாரும் நம் தேச உதவி முதன் மந்திரியாயுமிருந்து மறைந்த சர்தார் வல்லபாய் படேல் அவர்களது முயற்சியால் 1951ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருப்பது பெரிதும் ஆறுதலளிக்க வல்லதாகும்.

அதன்பின் அலாவுதீன் என்னும் முஸ்லிம் மன்னனின் சேனாதிபதி மாலிக் காபூர் தெற்கே இராமேச்சாத்திலிருந்து கடற்கரை ஓரமாயிருந்த பல கோயில்களை இடித்துச் சென்றுள்ளான்.

அதன்பின் பாமினி சுல்தான்கள் அழித்த விஜயநகரக் கோயில்களும், பிறமத வெறியே உருவாய்க்கொண்ட மொகலாய ஒளரங்கசிப்பினால் அழிந்த காசி, அயோத்தி முதலிய பதிகளில் விளங்கிய பண்டைக் கோயில்களும் பலப்பலவாகும்.

இதுவன்றி, சிலநூற்றாண்டுகட்கு முன் மைசூரைக் கவர்ந்து ஆண்ட ஹைதர் அலியால் விளைந்த தீமைகளை 'ஹைதர் கலாபனை' என்னும் வழிவழிச் செய்திகளால் அறியலாகும். அவனாலும் அவன் போன்ற பிறமத அரசர் முதலியோராலும் மூர்த்திகள் பல கொண்டுபோகப்பட்டன என்றும், அதற்கஞ்சிக் கோயில் மூர்த்திகளில் சிறந்தவற்றை இவ்வன்னியர்களது படையெடுப்பின்போது இடம் பெயர்த்துச் சுரங்கம் முதலியவற்றுள் மறைத்து வைத்து விட்டு, உரிய இடத்தில் வேறு போலி உருவங்களை வைத்

*வட இந்தியாவில் கூர்ஜாத்தில் உள்ளது.

தனர் என்றும், பின்பு பகைவர்கள் சென்றதும் மீண்டும் பண்டைய திருமேனிகளை அவ்விடத்தில் வைப்பது வழக்கம் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். இதற்குச் சான்றாக, சாமிமலை, திருக்காளத்தி முதலிய பல தலங்களில் 'அந்நியர் படையெடுப்பின் போது பேர்லியாக வைக்கப்பட்ட மூர்த்திகள்' எனச் சில உருவங்கள் தனியே உள்ளன.

சுரங்கங்களில் ஒளித்துவைக்கப்பட்டவை பல ஆபரணங்கள் முதலிய சிறந்த பொருள்களுடன் இப்போது பல இடங்களில் இருந்து அடிக்கடி கிடைத்து வருகின்றன. பல இடத்தும் சிறந்த சிற்பங்கள் பல சிதைக்கப்பட்டிருப்பதிலிருந்தும் கோயில்கள் அடைந்த கேடுகள் *அறியப்படுகின்றன.

சில ஆண்டுகட்குமுன் 'ஆனந்த விகடன் தீபாவளி மலரில்,' சதகச் செய்யுளில் குறிக்கப்படும் ஒரு வரலாற்றை 'அம்பலத்துப் புளி' என்னும் தலைப்பின் கீழ் வரையு முகத்தால், மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள், ஒரு படையெடுப்பின்போது தில்லை நடராசர் ஓர் புளியமரப்பொந்தில் இருந்தார்என்பதைவிளக்கியுள்ளார்கள்.

இப்போது அண்மையில் நம் நாடு சுதந்திரம் பெற்றபின் 'பாகிஸ்தான்' பகுதியில் உள்ள திருக்கோயில்களும் இந்து மக்களும் பட்டபாடும் தொல்லைகளையும் பற்றி ஒரு சிறிது கேட்டு நாம் துயர் உற்றோம்.

நிற்க, இவ்வாறு இம்முஸ்லிம் மக்களின் பெருக்கால் அழிந்து தோன்றும் சோணாட்டுத் தேவாரத்தலமாகிய திருச்சக்கரப்பள்ளியின் நிலையை ஈண்டுக் கூறல் வேண்டும்.

இவ்வூர் தஞ்சைக்குக் கிழக்கிலுள்ள ஐயம்பேட்டைக்கு கீழ்பால் உள்ளது. இவ்வூரைத் தஞ்சை மராட்டிய மன்னன் ஒருவனிடமிருந்து இனம்பெற்ற ஓர் முஸ்லிம் வைத்தியர் இதன் சொத்துக்கள் யாவற்றையும் தம்மினத்தவ

---

*தற்காலத்தில் சில இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட உருவங்களும் இவ்வன்னியர் படையெடுப்பின்போது புதைக்கப்பட்டவைகளாக இருக்கலாம்.

ருக்கே விற்று, அவர்களது குடியிருப்பை இக்கோயிலைச் சுற்றிப் பெருக்கியதால் இக்கோயில் சுமார் 30 ஆண்டுகட்கு முன், 'கோயில் மூர்த்திகள் யாவும் உடைக்கப்பட்டு விழாமூர்த்திகள் யாவும் கிணற்றுள் தள்ளப்பட்டன. அப்போது திருவாவடுதுறை ஆதினத்தில் வீற்றிருந்த ஸ்ரீல ஸ்ரீ. அம்பலவாண தேசிக மகாசந்நிதானத்தின் பெருமுயற்சியால் அக்கோயில் மீண்டும் மூர்த்திகளோடு புதுப்பிக்கப்பட்டு, நின்றுபோன பெருவிழாவாகிய பங்குனி உத்திர ஏழூர் விழாவும்* எதிரிகள் கண்டு அஞ்சும் முறையில் தக்கவாறு நடந்து வந்தன.

அவர்களுக்குப் பின் இதனைப் போற்றுவாரில்லை. கோயில் பக்கம் எஞ்சி இருந்த ஒரு சில சைவக் குடிகளும் புறமதத்தினர்களுக்கருகில் குடியிருக்க அஞ்சி, தங்கள் இருப்பிடங்களை விற்றுவிட்டு இச்சக்காப்பள்ளிக்† கோயிலை முஸ்லிம் மக்களுக்கிடையில் இடர்ப்படும்படி வைத்து அகன்றனர். இதனால், பூசை முதலியனவும் விழாவும் நின்றன. சுற்றி இவர்களது இன்னல்களுக்கு ஆளாகாத வாறு பாதுகாப்பாயிருந்த 'ரத்தினமதில்' என அருணகிரிநாதரால் புகழப்பட்ட வெளித்திருமதிள் இடிந்து விழத் தயாராய் இருந்தது. இவ்வாறு உற்ற இன்னல்களைக் களைந்தனர் இரு அன்பர்கள்.

திருமதில் வீழ்ந்திருக்குமாயின் பண்டுபோல் மூர்த்திகளும் பிறவும் அழிந்து 274 தேவாரப் பதிகளுள் ஒன்றை இழந்திருக்க நேரிட்டிருக்கும். அவ்வாறு ஆகாதிருக்க, அத் திருமதில்களைத் தம்மூக்கத்தாலும் பிற அன்பர் பலாது

---

*திருச்சக்காப்பள்ளியில் இருந்து இறைவன் புறப்பட்டு அரிமங்கை, சூலமங்கை, நந்திமங்கை, பசுபதிமங்கை, தாழமங்கை, புள்ளமங்கை முதலிய தலங்களுக்குச் செல்லுவது வழக்கம்.

†இதுபோல் முஸ்லிம் மக்கள் பெருக்கமுள்ள திருஆலூரில் சைவர்கள் பெரும்பொருள் பெற்றுக்கொண்டு தம்மிடத்தை விற்று அகலுகின்றனர்.

பேருதவியாலும் திருப்பணி புரிந்தவர், தஞ்சை ஜில்லா போர்டு உயர்நிலைப்பள்ளிகளில் தலைமை ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்றுத் தமிழ்ப் பணியும் சமயப்பணியும் புரிந்து வரும் உயர்திரு. சாமிவேலாயுதம் பிள்ளையவர்கள் ஆவார்கள். அத்துடன் கோயில் ஓரமாய் இருந்த இக்கோயிலின் நிலப்பகுதிகள் ஓர் முகம்மதியரிடம் ஒத்தியாக இருந்ததை, சென்னை திருஒற்றியூரான் அடிமை த. ப. இராமசாமிப் பிள்ளையவர்களது பொருளுதவியால் மீட்டு வைத்தார்கள்.

இதுவன்றி, இக்கோயிலில் நின்ற பூசை, விழா இரண்டையும் தருமகர்த்தாக இருந்து நடத்த முகம்மதியர்களது அச்சுறுத்தலுக்குப் பயந்து எவரும் வராது இருக்க, பெருங்கருணையுடன் அதனை மிக்க சிரத்தையோடு ஏற்று நடத்திவருபவர் அவ்வூர் மருங்கில் உள்ள உயர்திரு. தியாகராச காடவராயர் என்பவர் ஆவார்கள்.

ஆனால், இக்கோயில் அதன் மருங்கு சூழ்ந்துள்ள முகம்மதியரால் விளக்கம் பெறாது உள்ளது. இதுபோல் இம்மக்களது பெருக்கத்தால் சைவக்குடிகள் குறைந்து வரும் பாடற்பதிகளாகிய ஆவூர், ஆக்கூர், நீடூர், பூந்துருத்தி, ஆலம்பொழில் முதலிய பதிகளின் நிலை பின்னர் என்ன ஆகுமோ எனக் கருத வேண்டியதாயுள்ளது.

சைவமக்கள் பலர் இக்காலத்தில் கோயில் அருகில் உள்ள தங்கள் குடியிருப்பு இடங்களைப் பொருளாசையால் பிற மதத்தவருக்கு விற்பதாலும், கோயில் பக்கமும் இன்னும் இதற்குரிமையான இடங்களைக் கோயிலாரே பிறமதத்தவருக்கு வாடகைக்கும் பகுதிக்கும் கொடுப்பதாலும் விளையும் கேடுகள் இக்காலத்தில் நிறைய உள. இலம்பையங்கோட்டூர் எனும் தேவாரப் பதியில் ஒரு சைவக் குடும்பமேனுமில்லை கோயில் கிருஸ்தவக் குடிகளால் சூழப் பெற்றிருப்பதால் அது விளக்கமுறாது உள்ளது. அண்மையில், தில்லைத்திருவீதி ஒன்றில் கோயில் பூசைக் கட்டளைக்குரிய இடத்தில் மாதா கோயில் கட்டப் பெருமுயற்சி

செய்யப்பட்டது. ஆனால் அது தக்கார்களால் தடுக்கப்பட்டது. ஆரூர்ப்பூங்கோயில் நிலத்தின் ஓர் பகுதியைக் குத்தகைக்கு வைத்திருந்த ஓர் கிருஸ்தவர் பின்னர் அதனை ஓர் மாதா கோயிலுக்கு உரிமையாக்கப் பின் கோயிலாரால் வழக்குத் தொடரப்பட்ட தென்றும் அறிகிறோம். இவ்வாறு இக் கோயில்களுக்குப் பிறமதத்தவரால் இடையூறு வரும் வண்ணம் செய்பவர்கள் நம் சமயத்தவரே எனலாம். இப்படிப்பட்ட ஒரு சில சைவர்களால் பிறமத ஆதிக்கம் அதிகமுற்று நம் தெய்வ ஆலயங்கள் அழிந்தொழிந்தவை பல. விரைவில் அழிய இருப்பனவும் உள.

இதுவன்றி ஐரோப்பியரது படையெடுப்பால் சிதைந்தனவும் சில உள. போர்த்துகீசியரே முதன்முதல் நம் இந்து மக்கள் பலரைக் கிருத்துவ மதத்தில் சேரத் தொல்லையிட்டவர்கள் எனச் சரித்திரம் கூறும். இவர்கள் ஈழநாட்டு இரு தேவாரப்பதிகளில் ஒன்றாகிய திருக்கோணமலையைத் தகர்த்து அங்கோர் கோட்டை கட்டினதுமன்றி நம் தேசக் கீழ்கரை ஓரமாக நாகையிலிருந்து சென்னைவரை பல கோயில்களை இடித்துள்ளனர் எனவும் கூறுவர்.

2. வெள்ளப் பெருக்கால் இடருற்றவை

ஆற்று நீர்ப் பெருக்கத்தாலும், கடல் அலை வேகத்தாலும் அழிந்து புதுப்பிக்கப்பட்டவைகளும், புதுப்பிக்கப்படாது மறைந்தவையும், மூழ்கித் தப்பித்தவையும் சில உண்டு.

வெள்ளாறு என வழங்கும் 'நிவா' நதியும், மணிமுத்தாநதியும் கூடுமிடத்தில் இருந்த சுந்தரர் பாடல்பெற்ற திருக்கூடலையாற்றூர் என்னும் தலம் அவ்விரு ஆற்றுப் பெருவெள்ளத்தால் முற்றிலும் அழிந்து மீண்டும் அங்கே புதுப்பிக்கப்பட்டது. சிதம்பரத்திற்குத் தென்கிழக்கில் இருந்த திருக்கழிப்பாலை என்னும் மூவர் பாடல்பெற்ற பதி, கொள்ளிடப் போராற்றின் பெருவெள்ளத்தால்

அழிந்து பின் அதனைச் சிவபுரி என வழங்கும் திருநெல் வாயில் தலத்தின் தென்பக்கம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.*

தஞ்சைக்கு வடமேற்கில் திருக்காட்டுப்பள்ளிக்கு வடபால் கொள்ளிடக்கரை ஓரமாயிருந்த திருக்கானூர் எனும் தேவாரப்பதி அவ்வாற்றின் வெள்ளத்தால் மணலால் மூடப்பட்டு அண்மையில் சில ஆண்டுகட்கு முன் தோண்டி மீட்கப்பட்டது. கடலூருக்கருகில் உள்ள திருச்சோபுரம் எனும் பாடல்பதி, கடல்அலை வேகத்தால் மணலால் மூடப்பட்டு மறைந்திருந்த தென்றும், சில ஆண்டுகட்கு முன் இரு தம்பிரான்களால் கண்டுபிடிக்கப் பட்டுத் தோண்டி மீட்கப்பட்ட தென்றும், அதனால் இதைத் தம்பிரான் கண்ட தலம் என அழைக்கப்படுகிறது என்பர்.

அண்மையில் நம் கண் பார்க்க சென்னை நகர நீர்த் தேக்கத்தால் மூழ்கி மறைந்த சுந்தரர் பாடல்பெற்ற 'திரு வெண்பாக்க'த்தினை நாம் அறிவோம். அன்று சுந்தரர்க்கு ஊன்றுகோலருளிய வெண்பாக்க வெண்கோயிலை† மீண் டும் ஊன்றுபவர் எவரோ?

சமீபத்தில் 13—12—51 சுதேசமித்திரன் தினத் தாளில் இலங்கையில் ஓர் கோயிலும், 14—12—51 அதே தாளில் தஞ்சை ஜில்லா தரங்கம்பாடி கடற்கரை ஓரமாய் ஓர் கோயிலும் கடல் அலையால் அழிந்தன எனக் குறிப்பிட்டிருந்தது. இதுபோல் வெள்ளத்தால் அழிந்தவை இன்னும் எவ்வளவோ? இன்னும் அழிய எத்தனை இருக் கிறதோ?

3. சோத்துக்கள் பராதீனம்

முன்னர் நம் திருக்கோயில்களது நிர்வாகத்திற்குக் கிராமம் கிராமமாகவும் விடப்பட்டிருந்த மான்ய விபரத்தைக்

---

*இப்பணியைப் போல் பிறவற்றையும் செய்து பெரும் பேறடைய முன் வருவார்களாக.

†...வெண்கோயிலிங்கிருந்தாயோ வென்ன (சுந்தரர் 7-89-10)

கல்வெட்டு முதலிய சான்றுகளால் அறிகிறோம். ஆனால் அவ்வாறு பெற்றிருந்தவற்றுள் சில வேலிக் கணக்கிலும், பல ஒன்றுமில்லாமலும் உள்ளன.

இவ்வாறு முன் விடப்பட்டவை எங்கே? மக்கள் ஒரு சிலாது தந்திரத்தால் கொள்ளப்பட்டன. சான்றுகள் பல இடத்தும் அங்கிலங்கள் பலவற்றுள் இருந்தே அறியலாம். விரிப்பில் பெருகும்.

இவ்வித வகையில் தஞ்சை ஜில்லாவில் தஞ்சையில் முன் கோயில் பெருக்கத்திற்குக் காரணமாயிருந்த சோழ மன்னர்களது ஆட்சிபீடத்தில் இறுதியில் இருந்த மாராட்டிய மன்னர்கள் ஒரு சிலாது செய்கைகள் சில ஆகும். தம் நலம் நிறைவேறிய காரணத்தாலோ வேறு எதனாலோ 'திருப்பாலைத்துறை'* என்னும் பாடல் பதியை ஓர் பேஷ்வாவுக்கு† இனம்செய்ய அக்குடும்பத்தினர் நாளடைவில் அவ்வூரைப் பலரிடம் துண்டாய் விற்றனர். (அதோடன்றிக் கோயில் சிலை ஒன்றைக் கூட ஒருவர் விலை கூறினர் எனவும் கூறுவர்).

திருச்சக்காப்பள்ளி எனும் பாடற்பதியை ஓர் முகம்மதியருக்கு ஓர் மாராட்டிய மன்னன் இனம் அளித்ததனால் விளைந்தவற்றை முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

திருப்பழையாறை எனும் சோழ நாட்டுத் தேவாரப் பெரும்பதியில் அவ்வூர்ப் பெருமான் பெயரால் உள்ள சோமலிங்கம் தைக்கால் என்னும் ஒரு பெருந் தோப்பு முகம்மதியர் வசம் உள்ளது இன்றுங் கண்டு வருந்தத் தக்கதாகும்.

4. மக்கள் கவலையின்மையால் சிதைந்து அழிபவை

மக்கள் குடியற்ற இடத்திலிருப்பதாலும், குடியிருந்தும் அவர்களால் கவனிக்கப்படாமையாலும், இன்னும் பல விதக் காரணங்களாலும் கோயில்கள் மீது மரங்கள் முளைத்துப் பருத்து கோயில்களைத் தகர்த்து வருகின்றன. இவ்வா

---

*மாராட்டிய மன்னர்களது மந்திரி.

†இக்கோயில் நிலவரங்கள் பின்னர் வருகின்றன.

ருகிவரும் கோயில்களுள் நம் சமயத்திற்கே பெருஞ் சிறப்பைத்தரும் பாடற்பதிகள் சிலவற்றை ஈண்டுக் கூறுவாம்.

1. திருச்சேய்ஞலூர்: கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 10கல் தூரத்தில் உள்ளது. உலகத்தார் எப்படிச் சிவபூசை புரிவதென அறிவிக்கும் வகையில், முன்னர் முருகப் பெருமான் 'யாமுறைதற்கு நல்லமா நகர்'* இது எனக் கூறி இதில் தங்கிப் பூசித்தார். அவ்வாறு உலகில் பூசிப்போருக்கு அதன் பயனை நல்கும் சண்டேசுரப் பெருமான் பிறந்த பதியும் இதுவே. 'மண்ணின் பயனும் அப்பதியின் வளத்தின் பெருமை வரம்புடைத்தோ' என்று சேக்கிழார்பெருமானால் பெரியபுராணத்துள் புகழப்பட்டது. 'சீரடைந்த கோயில் மல்கு சேய்ஞலூர்' என்று திருஞானசம்பந்தர் பாராட்டியுள்ளார். இப்பெருங் கோயிலில் சுவாமியின் திருக்கோயிலைத் தவிர்த்து ஏனைய பாகங்கள் யாவும் அழிவுற்று மறைந்த நிலையில் உள்ளன. அம்பிகையும் பரிவாரமூர்த்திகள் உட்படப் பிறமூர்த்திகள் யாவும் இறைவன் கோயிலுக்குள் குவிக்கப்பட்டுள்ளன. சண்டேசுரப் பெருமான் பிறந்த பதியாக இவ்வூர் இருந்தும் மற்றைத் தலங்களில் இருப்பது போன்று அவருக்குரிய இடத்தில் அவர் காணப்படவில்லை. பின்பு எங்குள்ளார்? தெட்சிணாமூர்த்திக்கு அருகில் அவரது திருஉருவம் அசைந்தாடு நிலைமையில் கிடக்கின்றது. கொடுமை! கொடுமை!

இன்னும் வருந்தத்தக்க பிறிதொரு நிலையைக் கூறின், எஞ்சி நிற்கும் இறைவனது கோயிலின்மேல் முளைத்து பருத்தோங்கும் மரம் காண்கின்றது. இன்னும் சிலகாலத்திற்குள் அது கோயிலைத் தகர்த்துத் தலத்தின் அடையாளமில்லாது செய்துவிடும். சிவபூசனைப் பெருமையை விளக்கி அதன் பயனைத் தரும் சண்டேசுரப் பெருமான் பிறந்தபதி இவ்வாறு இருப்பின் நாமெல்லாம் சிவபூசனை புரிந்து அப்பயனை எவ்வாறு அடைய இயலும்! சைவமக்களின் சமய உணர்ச்சியைப் பற்றி யாது நினைப்பது?

---

*'கச்சிபல தளி ஏகம்பத்தும் கயிலாய நாதனையே காணலாமே' (அப்பர் க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்).

2. திருந்துதேவன்குடி : இது மிகச் சீர்கேடான நிலையில் இருக்கிறது. இன்னும் சிலகாலத்திற்குள் அழிந்து, 'முன் இங்கோர் பாடற் கோயில் இருந்தது' என்றுமட்டும் நம் பின்னோர்களால் கூறப்படும் நிலைக்கு வந்துகொண்டிருக் கிறது.

இக்கோயில் கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 3 கல் தூரத்தில் உள்ளது.

இப்பதியில் உறையும் பெருமானின் வேடங்கள் இவை என நமக்குக் காட்டும் அருட்குறிப்பை உணர்த்துகின்றன என்பதை,

> " மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
> புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
> திருந்துதே வன்குடி தேவர்தே வெய்திய
> அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே "

என ஞானசம்பந்தர் விளக்குகின்றார்.

இத்தகைய மூர்த்தி விளங்கும் இக்கோயிலைச் சுற்றிக் குடியிருப்பேயின்றி, வயல்களும், கருவை மரங்களும் சூழ்ந் துள்ளன. கோயிலின் எல்லாப் பகுதியும் இடிந்துவிழுந்து, சென்று தரிசிப்பார் அற்று உள்ளது.

ஆனால் இத்தல வரலாற்றில் நண்டு பூசித்துப் பேறு பெற்றது எனக் கூறுவதை மெய்ப்பிக்க சுற்றியுள்ள வயல் களின் நண்டுகள் பெருக்கமாய் வசிப்பதையும், அவற்றை உண்ண நரிகள் திரிவதையும் தரிசிக்கலாம்! அந்தோ! சம்பந்தப் பெருமானின் அழகிய பாடல்பெற்ற இவ்வரும் பதி, நம் கண் முன்னேயே இன்னும் சிலகாலத்திற்குள் அழிந்துவிடப் போகின்றதே! என்ன பரிதாபம்!

3. திருப்பழையாறை : இப்பதி கும்பகோணத்தின் மேல்புறமுள்ள தாராசுரம் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கில் 2 கல் தூரத்தில் உள்ளது. எவ்வாறு கச்சிஏகம்பம் (காஞ்சிபுரம்) பாடல் தலங்கள் வைப்புத் தலங்கள் புராணச் சிறப்புற்ற கோயில்கள் பலவற்றைத் தன்பால்கொண்டு, 'கச் சிப் பலதளி ஏகம்பம்' எனச் சிறப்புற்று விளங்குகின்றதோ அதுபோல் இப் பழையாறைப் பெருநகர் பாடற்பதிகளான

திருப்பழையாறை வடதளி, திருப்பட்டீச்சரம், திருச்சத்தி முற்றம் என்னும் மூன்றையும் கொண்டுள்ளது. வைப்புத் தலங்களில் ஆறைமேற்றளி, முழையூர், அரிச்சந்திரம், பாற்குளம் முதலியவற்றையும், புராணச் சிறப்பை விளக்கும் வேறு பலப்பல கோயில்களையும் தன்னகத்தே பெற்று, "பழையாறைப் பலதளி" எனக் கூறும் வகையில் உள்ளது.

அதனோடன்றி நம் மாகாணத் தலைநகராகிய சென்னை மாநகர் எவ்வாறு பலப்பல ஊர்களை தன் பரப்பில் அடக்கிக் கொண்டு ஓர் பெருந் தலைநகராய் இப்போது விளங்குகின்றதோ, அதுபோன்று முன்பு 12ஆம் நூற்றாண்டில் இப்பதி சோழ மன்னர்களது தலைநகராய்ப் பெருகி இருந்தது.

இத்தலம், அம்மையார் தவம் செய்து பேறு பெற்றதும், இராமர் வழிபட்டுத் தமக்குற்ற இராவணக் கொலைப் பழி நீங்கப்பெற்றதும், அமர்நீதியார் பிறந்ததும், அப்பர் தமக்குத் திருவடி சூட்ட விண்ணப்பித்துக்கொண்டதும், சம்பந்தர் முத்துப்பந்தர் பெற்றதும், சுந்தரர் வந்து தரிசித்ததும், சிவப்பிரகாசர் குருவின் சமாதிக் கோயில் மடங்களை யுடையதும், சத்திமுற்றப் புலவர் முதலிய *புலவர் பெருமக்கள் வாழ்ந்த சிறப்பினைக் கொண்டதும் ஆகும். இதனை,

"சீரின் நீடிய செம்பியர் பொன்னி நன்னாட்டுக்
காரின் மேவிய களியளி மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து
பாரின் நீடிய பெருமைசேர் பதிபழையாறை

எனச் சேக்கிழார் பெருமான் புகழ்கின்றார். இத் தொல்பதி இப்போது காணுமிடமெங்கும் அழிந்துவரும் பல கோயில்களையும் பற்பல இடத்தில் சிதைந்து கிடக்கும் அருவுருவத் திருமேனிகளையும், இடிந்துவரும் பலப்பல பெருமண்டபங்களையும், தூர்ந்துவரும் பல திருக்குளங்களையும் நாமெல்லாம் கண்டு வருந்துமாறு காட்டி நிற்கின்றது.

அப்பர் பெருமான் உண்ணாவிரதமிருந்து சமணர்களிடமிருந்து மீட்ட திருப்பழையாறை வடதளி என்னும் பெருந்

---

*பிற்காலத்தில் இவ்வூரில் சிலகாலம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தங்கியுள்ளார்கள்.

திருக்கோயிலின் பரிதாபக் கோலத்தைப் பார்க்கும் அன்பர் கண்டு கலங்குவர். அது எடுத்தியம்ப இயலாத எளிய நிலையிலுள்ளது. இப்பெருங்கோயிலில் இடிந்து விழுந்த பெருங்கருங்கற்கள் யாவும் போன இடமே தெரியவில்லை. சிறந்த வேலைப்பாடடைந்த திருக்கோயில், மண்டபங்கள் யாவும் முன்னமே அழிந்தும் இப்போது அழிந்துகொண்டும் இருக்கின்றன. அங்கிருந்த மிக்க அழகிய* கருங்கல், செப்பு உருவங்கள் யாவும் பூசனை முதலியன இன்றி, பல இடத்தும் வைக்கப்பட்டுள்ளன.

ஆறைவடதளி எனும் வைப்புக் கோயிலில் இறைவன் கோயில் ஒன்றுமட்டுமே எஞ்சியுள்ளது. அதிலும் அக் கோயிலுக்குப் பூட்டுமில்லை, திறப்புமில்லை. கால்நடைப் பிராணிகளால் இஷ்டம்போல் உள்சென்று அசுங்கிதம் செய்கின்றன. கேட்பாரில்லை. இங்குள்ள மகாலிங்கமூர்த்தியின் உருவத்தின் பெருமையையும், அழகையும் அது இப்போதடைந்த இழிநிலையையும் நினைத்தால் கண்ணீர்விட வேண்டிவருகிறது. இன்னும் இதன் வடகிழக்கில் உள்ள கோபிநாதப்பெருமான் கோயில் எனும் சிற்றூரில் ஒரு பெரிய கோயில், இடிந்துவரும் முன்கோபுரம், வடக்குத் திருமதில் இவற்றைத் தவிர ஏனைய பாகங்கள் யாவும் இழந்த நிலையில் உள்ளது.

இன்னுமொரு கோயில் (ஆறைவடதளி)க்கு (திருமத்தடிக்கு) தென்கிழக்கில் திருமலைராசன் ஆற்றின் தென்கரை ஓரமாய் உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் பருமனில் தஞ்சைப் பெருவுடையாருக்கு அடுத்ததாய் மிகப் பொலிவுடன் விளங்குகிறது. இத்தகைய இத்திருவுருவம் பூசனை எதுவுமின்றி மேலே பிராணிகளால் அசுத்தம் செய்யப்பட்டுக் கிடக்கின்றது. இது உறையும் திருக்கோயில் பூட்டுத்திறப்பின்றி, சுற்றிப் படுகையில் உள்ள உழவர்கள் தங்கள் கலப்பை, மண்வெட்டி முதலியவற்றை வைக்கும் இடமாயும் உள்ளது. சுற்றிலும் உள்ள பாண இலிங்கங்கள், சாய்ந்து

---

*இங்குள்ள திருஉருவங்கள் திருமுழுக்காட்டின்றி இருப்பது வருந்தத் தக்கவை.

கிடக்கும் உருவங்கள் இவற்றுள் சில, மாடுகட்டும் தறிக ளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவை யாவற்றையும் கண்டு கலங்குவோர் கவனத்தைக் கவர்வது, கோயில் முன் பில் உள்ள நந்தியெம் பெருமானது திருவுருவமாகும். இப் பெருமானது கருங்கல் உருவம், அருகில் நின்று பார்ப்போ ருக்குக்கூட உயிருடைய காளை மேய்ந்துவந்து படுத்திருப் பதுபோல் தோன்றுகிறது. இதன் கொண்டையும், கொம்பு களும், ஏனைய உறுப்புக்களும் வழுவழுப்புடன் விளங்க, தரையில் சாய்ந்தவண்ணம் உள்ளது.

இத்துடன் இக்கோயிலுக்குச் சிறிது வடமேற்கில் ஓர் படுகையின் மேல்புறத்தில் கோயிலை இழந்து நிற்கும் ஓர் இலிங்கம் பூமிக்குள் வெகு தூரம்வரை சென்று முன்னர் இருவரும் தேடி அடி காணு வரலாற்றை விளக்கும்வகையில் உள்ளது.

முன்காலத்தில் அளப்பரிய புகழுக்கு இடமாயிருந்த இப்பதி, இப்போது எண்ணமுடியா இழிநிலைக்கு இடமாயுள் ளது. நம் சமயத்திற்கும் நமக்கும் எவ்வளவு இழிநிலை என்பதை உணர வேண்டுமன்றோ ?

இராசேச்சரம் (தாராசுரம்) :—இன்றும் இப் பழை யாறையினைச் சார்ந்துஉள்ள தாராசுரம் புகைவண்டி நிலையத் திற்கு வடபால் உள்ள இரண்டாம் இராசராசனுல் கட்டப் பட்ட இராசேச்சரம் எனும் மிகப் பெருங்கோயில் கண்டார் கலங்கிக் கண்ணீர் விடுமாறு உள்ளது. மதுரை, அண்ணு மலை, தில்லை முதலிய பெருங்கோயில்களது பரப்பின் அள வைக் கொண்ட இப்பதி சுற்று மதில்கள்யாவும் அழியப் பெற்று, அவ்விடமெல்லாம் மக்களால் தமது அற்ப காரியங் களுக்குப் பயனுக்கப்பட்டு வருகிறது.

இக்கோயிலில் சிறந்த அழகினை உடைய பெருமண்ட பங்களும், நம்முடன் பேசுவனபோல் தோற்றமுடைய திரு உருவங்களும் பார்க்கப் பார்க்க நம் கண்முன் அகலாதவை. இன்னும் இறைவன் திருக்கோயிலின் அடிவரையைச் சுற்றிக் கருங்கல்லால் பெயருடன் செதுக்கப்பட்டுள்ள அறுபத்து

மூவர் திருவுருவங்களும், இன்னும் பல விசித்திர விநோத உருவங்களும்*, இதனைக் கட்டிய இரண்டாம் இராசராசனது உருவமும் ஓர்புறமுள்ள அன்னபூரணி† உருவமும் பிறவும் யாவரும் கண்டு களிப்புற வேண்டியவையாகும்.

தென்னாட்டில் சிற்ப அழகு, நுணுக்கம், விநோதம் முதலிய யாவற்றையும் பெரும் அளவில் அடையப்பெற்று ஓர் சிற்பக் கண்காட்சியாய் விளங்குவது இக்கோயிலேயாம்.

இத்தகைய சிற்பச் செல்வங்களை எப்பெருங் கோயிலி லும் பெரும் அளவில் காணமுடியாவகையில் உடைய இக் கோயிலின் சிதைத் நிலை மிகமிக வருந்தத்தக்கதாகும். அம்மையாரது தனிப்பெருங் கோயிலில் திருப்பணிக்கென அம்மையாரது திருவுருவம் தனியே வைக்கப்பட்டு இன்றும் திருப்பணி ஆகாதுள்ளது.

4. திருப்பாலைத்துறை:—வடமொழி வேதநான்கினுள் 'திரியீ' என அழைக்கப்படும் இருக்கு, யசுர், சாமம் என்னும் மூன்றினுள் யசுர் இடையில் உள்ளது. இதன் 101 சாகைகளுள் 51வது போதாயன சாகை இடையதாகும். இதன் 7 காண்டங்களுள் இடையது 4வது சதருத்ரம். இதன் 9 பிரச்சின்னத்தின் மத்தி 5வது பிரசசின்ன ருத்ரம். இதன் நடுவில் திருவைந்தெழுத்தாகிய நமசிவாய மந்திரத்தின் இடைப் பகுதியாகிய 'சிவ' என்பது விளங்குகின்றது. இது போல், நமது தென்மொழி வேதமாகிய சைவத் திருமுறை களுள் மூவர்தமிழ் எனும் தேவார ஆசிரியருள் திருநாவுக் கரசர் நடுவராவர். அவரது திருமுறைகள் 4, 5, 6 ஆகும். இவற்றுள் நடுத்திருமுறை 5வது. இது 101 திருக்குறுந் தொகைகளை (பதிகங்களை) உடையது. இவற்றுள் நடுப்பதி கம் 51வது ஆகும். இது 11 பாடல்களை உடையது. இப் பதினொரு பாடல்களில் நடுப்பாடல் 6வது ஆகும். இப் பாட லாவது:

---

*கருங்கல் வேலைப்பாட்டில் மிகச்சிறந்தவை.

†இவ்வுருவத்தின் அழகினை ஓர் ஓவியத்திலும் காண இயலாது.

"விண்ணி னோர்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னோர்மற வாது சிவாயவென்
றெண்ணி னோர்க்கிட மாம்எழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே"

என்பதில் இடையாகிய இரண்டாவதடி ஈற்றில் 'சிவாய' எனும் திருஐந்தெழுத்தின் சிறந்த பகுதி முத்துப்போல் மிளிர்கின்றது. இத்தகைய சிறந்த பதிகத்தைத் திருமுறைகளுள் நடுநாயகமாயுடைய திருப்பாலைத்துறை எனும் தொல்பதி சிறப்புற்று நடுநாயகமாய் விளங்காது, சிதைவுற்ற சிவாலயங்களுக்கெல்லாம் நடுநாயகமாய்க் காண்போர் வருந்தத் தக்க முறையில் உள்ளது. இது நம் சமயத்திற்கும் திருமுறைகட்கும் எவ்வளவு குறைபாடாகும்?

இத்தகைய இத் தொல்பதி தஞ்சைக்குக் கிழக்கில் உள்ள பாபநாசம் புகைவண்டி நிலையத்திற்குக் கீழ்ப்புறம் உள்ளது. திருநாவுக்கரசர் பாடல் பெற்றது. முன்னர் இது பெருஞ் செல்வத்துடன் இருந்துள்ளது என்பதற்குச் சான்று இங்குள்ள சுமார் 40, 45 அடி உயரமுள்ள நெற் களஞ்சியமேயாகும். இப்போது ஒருவேளை பூசைகூட நடைபெற வழியின்றி உள்ளது.

உயர்ந்த பெருமதில்கள், பெருமண்டபங்கள் யாவும் இடிந்து விழுந்து உட்பகுதியெல்லாம் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையாக உள்ளது. திருச்சுற்றிலும், இறைவன் சந்நிதியிலும் உள்ள மண்டபங்கள் தப்பித்தவறித் தரிசிக்கச் செல்வோரைப் பயமுறுத்தி வாராதவாறு செய்வதுபோல் நம் தலைமீது விழுந்துவிடும் நிலையில் உள்ளன. மழை பெய்யின், வெளியில் அசுத்தம் நிறைந்த இடங்களில் பெய்த நீரெல்லாம் உள்ளே வந்து தங்கிவிடும். பரிவார மூர்த்திகள் பல தம்மிருப்பிடங்கள் சிதைவுற்று, திருமுழுக்காட்டு, மருந்து முதலியன இன்றிச் சாய்ந்தும் விழுந்தும் கிடக்கின்றன.

மிக்க அழகும் பெரிதுமான சோமாஸ்கந்தர் முதலிய உற்சவமூர்த்திகள் யாவும் நம் கண்முன் காட்சியளிக்காது, தம்மிடமின்றி ஓரிருட்டறையில் சிறைவாசம் செய்கின்றன.

30

அம்மம்ம ! இக்கோயிலின் சிதைவுறும் நிலையினும் இழிநிலையானது மிகமிக வருந்திக் கண்ணீர்விடவேண்டியதாயுள்ளது.

5. திருத்தலையாலங்காடு: இத்தொல்பதி திருவாரூருக்கு வடமேற்கில் சுமார் 9 கல் தூரத்தில் உள்ளது. 'தாயாகி உலகுக்கு எல்லாம் தரும் பொருள்' என அப்பரால் போற்றப்பட்ட இக்கோயில், சுவாமி அம்மை கோயிலைத் தவிர்த்த எல்லாப் பாகங்களையும் இழந்து நிற்கிறது. திருத்தலையாலங்காடு என்னும் அருமைப் பெயரை உடைய இப்பதி தரிசலங்காடு என வழங்குதற்கேற்ப, கோயிலின் சுற்றுப்பகுதிகள் யாவும் தரிசாகத்தான் உள்ளன. பூசனை நேரம் தவிர்த்து ஏனைய காலங்களில் தரிசிக்க முடியாது கதவு திருக்காப்பிட்டுள்ளது.

6. திருச்சேறை: "என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே……………சேறையுட் செந்நெறி மன்னுசோதி நம்பால் வந்து வைகவே" எனவும், "பிறப்பும் மூப்பும் பெரும்பசி வான்பிணி, இறப்பும் நீங்கிஇங்கு இன்பம்வந் தெய்திடும்" என்று அப்பரால் போற்றப்பெற்ற இவ்வரும் பதியில் உள்ள இறைவன், சிதைந்து வீழும் கோயிலில் இருப்பது இதைக் காண்போருக்குப் பெருந் துன்பந் தருவதா யிருக்கின்றது.

"மனமுடை அடியவர் படுதுயர்களையும் வாய்மையர்" எனச் சம்பந்தர் கூறியதற்கேற்ப, நம் துயர்களை இவ்விறைவர் திருவருளால் களைய இக்கோயிலின் மீது முளைத்துள்ள மரங்களைக் களைந்து, கோயிலை நன்னிலைக்குக் கொணர்ந்து இப்பதியின் பதிகத்துள் கூறிய பேறுகளைப் பெறுவோமாக. இத்தலம் கும்பகோணம் திருவாரூர்ப் பாதையின் இடையில் உள்ளது.

திருமாலின் திருக்கோயில் இக்கோயிலுக்கு மேல்புறம் மிகச் சிறந்து விளங்குகிறது. இக்கோயில் மட்டும் இழிந்த நிலையில் உள்ளது. இது இந்து சமூக ஒற்றுமைக்கே பழிப்புக்கிடமாய் உள்ளது.

7. திருப்பழனம்: தென்னாட்டுத் திருவிழாக்கள் பலவற்றுள் மிகச் சிறப்புப் பொருந்தியதும், தவறாது நடை

பெற்று வருவதுமான பெருவிழா திருவையாற்று ஏழூர்* விழா (சப்தஸ்தானம்) ஆகும். நம் சமயப் பெருமையினைத் தனிமுறையில் ஆண்டுதோறும் காணப்பெறும் இடம் இதுவே. இதில் தொடர்புள்ள 7 திருக்கோவில்களுள் மூன்று மிகவும் வருந்தத்தக்க நிலையில் உள்ளன. அவைகளுள் திருப்பழனம் ஒன்று.

இது தஞ்சைக்கு வடக்கில் 8 கல் தூரத்தில் உள்ள திருவையாற்றுக்குக் கிழக்கில் 2 கல் தூரத்தில், ஏழூர் விழாவின் இரண்டாவது தலமாய் விளங்குகிறது. இது சம்பந்தர், அப்பர் இருவர் பாடல் பெற்றதும், அப்பூதி அடிகள் தண்ணீர்ப்பந்தல் முதலிய தருமசாலைகள் வைத்து நடத்தியதுமான பெரும்பதி. இத்திருக்கோயிலின் பெரும் பகுதி சீர்குலைந்து வருகிறது. இத்துடன் தொடர்புற்ற வைப்புத்தலமும், அப்பூதி அடிகள் பிறந்த ஊருமாகிய திங்களூர்ச் சிவனார் கோயில் இப்பதிக்கு வடக்கில் 1 கல் தூரத்தில் ஊர்ப்புறத்தே தனிமையில் கவனிப்பாரற்றுச் சிதைந்து வருகின்றது.

8. திருச்சோற்றுத்துறை : '........சோற்றுத்துறை சோற்றுத்துறை என்பீராகில் துயர்நீங்கித் தூநெறிக்கட் சேராமே" என அப்பரால் போற்றப்பெற்ற இப்பதி முற்கூறிய திருவையாற்று ஏழூர் விழாவிற்குரிய, மூன்றாவது தலமாய், திருப்பழனத்திற்குத் தெற்கில் ஒரு கல் தூரத்தில் உள்ளது. இப் பெருவிழாவில் இத்தலத்தின் பெயருக்கேற்ப இது நண்பகல் வேளையில் எண்ணற்ற தொண்டர்கள் அமுதுண்ணும் இடமாயும், மூவர் தேவாரமும் பெற்ற பதியுமாக உள்ளது.

இக் கோயிலது திருமதில்கள் சிதைந்தும், முன் கோபுரம் மேற்பகுதி அற்றும், உள்ளே உள்ள திருச்சுற்று மாளிகைகள், மண்டபஙகள் யாவும் சிதைந்தும் கண்டோர்

---

*திருவையாற்றில் இறைவன் புறப்பட்டு (திருவையாறு) திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் எனும் ஏழு பாடற் பதிகளையும் ஒரு தினத்தில் சுற்றிவரும்.

வெறுக்கத்தக்க நிலையில் உள்ளன. உலகநாயகனுகிய சோமாஸ்கந்தப் பெருமானும் மற்ற விழாமூர்த்திகளும் தமக்குரிய இடங்களினின்றும் அகற்றப்பட்டு நடராசப் பெருமான், திருமுன் நவராத்திரி கொலுவில் பொம்மைகள் அடுக்கியிருப்பது போன்று ஆடையின்றி வைக்கப்பட்டுள் ளன. இப் பெருவிழாவில் வரும் ஐபாறப்பர் தங்கக்கூட மண்டபமும், பக்தகோடிகள் சென்று தரிசித்துத் தங்க வசதியுமின்றி இருக்கிறது.

9. திருவேதிகுடி : இதுவும் மேற்கூறிய ஏழூர் விழாவில் நான்காவது தலமாய், திருச்சோற்றுத்துறைக் குத் தென்பால் உள்ளது. "செல்வ நெடுமாடம் வளர்வீதி நிகழ்வேதி குடி" எனச் சம்பந்தரும், "...அத்தனை ஆரா அமுதினை..." என அப்பரும் போற்றிய அரும்பதி. இதன் நிலை முற்கூறிய இரண்டினும் கீழானது. கோயிலின் முற்பகுதியே யன்றி, உள்ளேயும் பல இடங்கள் சிதைந்து, காண்பதற்கே அருவருக்கத்தக்க நிலையில் உள்ளன. அம்மையார் திருக்கோயில் திருச்சுற்று முதலிய இன்றி, பக்கத்துக் குடியிருப்பு வீடுகளுடன் இணைந்துள்ள நிலையில் உள்ளது.

இவ்வாறு, திருவையாற்று ஏழூர்விழாவில் ஒரே பகலில் தரிசிக்கப்பெறுவனவும் தொடர்ந்த (2, 3, 4) பதிகளாயு முள்ள இம் மூன்றும் இத்தகைய நிலையில் உள்ளன !

10. திருஎதிர்கோள்பாடி : இப் பதியில், சுந்தரர், "செடிகொள்யாக்கை சென்று சென்று தேய்ந் தொல்லை வீழாமுன்............அடிகொள் கோயில் எதிர்கொள்பாடி என்ப தடைவோமே" என்று மக்கட்கு அறிவுறுத்தி யருளுகின்றார். இதற்கேற்ப, நாம் இங்குச் சென்றடையின், இக்கோயிலின் தொல்லைகள் என்று வீழும் என்று வேண் டத்தக்க நிலையில் ஆலயமிப்போது உள்ளது. முன்பக்கம், திருக்குளம் முதலிய யாவும் வெறுக்கத்தக் நிலையிலுள்ளன. உட்புறத்தில் உள்ள மண்டபங்கள் முதலியன சென்று தரிசிப்போர் மேல் விழுந்துவிடுமோ என அச்சமுறும் நிலையில் உள்ளன. இப்பதி மாயூரத்திற்கு மேற்கில் உள்ள

குத்தாலும் புகைவண்டி நிலயத்திற்கு வடக்கில் 2 கல் தூரத்தில் உள்ளது.

11. மேலைத்திருக்காட்டுப்பள்ளி : "………கூட்டை விட்டுயிர் போவதன் முன்னமே காட்டுப்பள்ளியுளான் கழல் சேர்மினே" என அப்பரும், "…கடிபொழில் சூழ்காட்டுப் பள்ளி" எனச் சம்பந்தரும் போற்றிய இவ்வரும்பதி, தஞ்சைக்கு வடமேற்கில், அதாவது பூதலூர் புகைவண்டி நிலயத்திற்கு வடக்கே 5 கல் தூரத்தில் உள்ளது. அப்பர் போற்றிய இப்பதியில், அவரது உழுவாரப் பணியை எவரும் இங்கு மேற்கொள்ளாமையால், ஒரு பெருஞ் செங்கற் காளவாய்க்குத் தேவையாகும் மரங்கள் செடிகள் முதலியன கோயிலின்மேல் முளைத்துத் தகர்க்கின்றன. சிறந்த திருக்குளம் கவனிப்பாரற்று இருப்பதால், இதனைத் தூர்த்து, அங்கு ஓர் பூங்கா (பார்க்) உண்டாக்கவும் யோசிக்கின்றனர்.

12. திருக்கானூர் : "தமிழிசீர்மை பேசித்தாளம் வீணை பண்ணினல்ல முழவம் மொந்தை மல்குபாடல் செய்கையிட மோவார்………கானூர் மேய பவளவண்ணரே" என ஞானசம்பந்தராலும், "கானூர் முளைத்த கரும்பினை" என அப்பராலும், "கானூர்க் கட்டியே" எனச் சுந்தராராலும் சுவையுடன் புகழப்பெற்ற பெருமான் உறையும் இடம், முன்கூறிய திருக்காட்டுப்பள்ளிக்கு வடக்கில்உள்ளது. இது வெள்ளப்பெருக்கால் மணல் மூடப்பின்பு தோண்டி மீட்கப் பட்ட விபரம் முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

இக்கோயிலைச் சுற்றிக் குடியிருப்பின்றியும், கோயிலின் வெளிப்பகுதிகள் பல அற்றும் உட்பகுதிகளில் பல சிதைந்தும் உள்ளன.

13. திருவைகாவூர் : இப்பதி, தஞ்சை-கும்பகோணம் புகைவண்டிப் பாதையின் இடையில் உள்ள சுந்தரப் பெருமாள் கோயில் புகைவண்டி நிலயத்தினின்று வடக்கே நான்கு கல் தூரத்தில், கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. "…ஏழையடியாரவர் யாவை சொன சொன் மகிழும் ஈசன்" எனச் சம்பந்தரால் புகழப்பட்ட இக்

கோயிலது எழ்மை நிலைமை மிகவும் வருந்தத்தக்கது. முன் கோபுரத்தின் மேற்பகுதி அற்றும், திருமதில்களிற் பிளவு பட்டும் உள்ளன. இவை யாவற்றினும் மோசமான காட்சி அம்மையாருருவம் மருந்தின்றிச் சாய்ந்துள்ள* நிலையாகும்.

இதுவன்றி கோயில் மூர்த்திகள் பலவும் கபிஸ்தலம் மூப்பனார் சிவராத்திரி விழாக் கொண்டாடுகிறார். சிறப் பொன்றுமின்றிப் பூசிக்கப்படுகின்றன. பூசகரும் தக்கவர் இல்லை.

14. திருக்கோழம்பம் (திருவாவடுதுறை) : இது, சைவத் திருமுறை முழக்கத் தொடக்கப் பாக்களில் ஒன்றாக இக்காலத்தில் பாடப்படும் "...சமராசூரபன் மாவைத் தடிந்தவேல், குமரன் தாதைநற் கோழம்ப மேவிய" எனும் பதிகமுடையது. இப்பதி மாயவரத்திற்கு மேற்கிலுள்ள நாரசிங்கன் பேட்டைப் புகைவண்டி நிலையத் திற்குத் தெற்கில் மூன்றுகல் தூரத்தில் உள்ளது. கோயி லின் முன் கோபுரத்தில் மேற்பகுதி யில்லை. திருமதில் மண்டபங்கள் முதலியவற்றின்மேல் மரங்கள் முளைத்துச் சிதைந்து வருகின்றன. நித்தியபூசை முதலியனவும் மிக்க எழ்மையான நிலையில் நடைபெறுகிறது. பூசை நேரத்தைத் தவிர்த்து ஏனைய காலங்களில் எவரும் போய்த் தரிசிக்க முடியாதபடி திருக்காப்பிடப்பட்டுள்ளது.

15. திருஇராமனதீச்சரம் : அப்பாடிகள் முத்தி எய் திய திருப்புகலூருக்குத் தென்பால் ஒருகல் தூரத்தில் உள்ள திருக்கண்ணபுரத்தின் கிழ்பால் உள்ளது. சம்பந்தர் பாடல்பெற்றது. சம்பந்தர், அப்பர், முருகர், நீலநக்கர், சிறுத்தொண்டர், நீலகண்டயாழ்ப்பாணர், சுந்தரர் முதலிய அடியவர் பெருமக்கள் தரிசித்து வாழ்ந்த சூழ்நிலையில் உள்ளது. இக்கோயில் ஊர்ப்புறத்தே விளக்கமுறாது சிதைந்து வருவது வருந்தத்தக்கது. இது ஓர் பாடல்பதி என்றுகூடப் பலர் அறியாவகையில் இங்கு இது ஒளி மழுங்கி உள்ளது.

---

*கடந்த 3 ஆண்டுகட்கு முன் இருந்த நிலை.

16. திருக்கருவிலி: இது கும்பகோணத்திற்குக் கீழ்ப் பக்கமுள்ள ஆடுதுறைப் புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கில் உள்ள புதூர் என்ற சிற்றூருக்குத் தென்பால் சுமார் 2 கல் தூரத்தில் வயற்புறத்தே உள்ளது. அப்பால், "...கல்லாரும் மதிள் சூழ்ந்த கருவிலி" எனப் போற்றப் பெற்ற திருமதில்கள் முதலியன சிதைந்து உள்ளன.

17. திருநாலூர் மயானம்: இப்பூம்பதி, திருவாரூருக்கு வடமேற்கில் உள்ள குடவாயிலுக்கு வடமேற்கில் ஒருகல் தூரத்தில் உள்ளது.

"பாலூரும் மலைப்பாம்பும் பனிமதியும் மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினன்
நாலூர் மயானத்து நம்பன்றன் அடிநினைந்து
மாலூரும் சிந்தையர்பால் வந்தூரு மறுபிறப்பே"

எனச் சம்பந்தரால் போற்றப்பெற்ற இப்பதி, போற்றுவாரின்றி, கோயின்மேல் மரங்கள் முதலியன முளைத்துச் சிதைந்துவரு நிலையிலுள்ளது. சுமார் பத்து ஆண்டுகட்கு முன் (1942) இறைவன் மருந்தின்றி இருந்தார். மறுபிறப் பிணி வந்தூருவண்ணம் செய்யும் இப்பெருமானது திருக் கோயில் மேலும் பழுதூருவண்ணம் பார்த்துக்கொள்வது நம் கடமையாகும்.

18. திருப்பெரும்புலியூர்: வியாக்கிரபாதர் (புலிக் கால் முனிவர்) பூசித்த திருப்பாதிரிப்புலியூர், பெரும்பற்றப் புலியூர் (சிதம்பரம்), திருஎருக்கத்தம்புலியூர் (இராசேந்திரன் பட்டினம்), திருஓமாம்புலியூர், திருப்பெரும்புலியூர் (பெரம்பூர்) எனும் ஐந்து புலியூர்ப் பதிகளுள் இது ஒன்று. விழாச் சிறப்பில் பெருமையுற்று விளங்கும் திருவையாற்றுக்கு வட மேற்கில் 3 கல் தூரத்தில் உள்ளது. அன்பர்களது திருப் பணியை எதிர்பார்த்து இக்கோயில் நிற்கிறது. அப்படி பணி செய்யின் "...பணிசெய்ய பெற்றிப் பெரிது முகப்பர்" எனச் சம்பந்தர் முன் பாடியுள்ளார். மிக உயர்ந்த மதில் களை உடையது இக்கோயில்.

19. திருப்பாம்புரம் : பாம்புகளுக்கரசனுகிய ஆதி சேடன் நித்தம் இப்பூவுலகிற்கு வந்த நான்கு வேளைகளில் பூசிக்கும் திருக்கோயில்களுள்*, இது மாலையில் பூசிக்கப் பெறும் மூன்ருவது பதியாகும். "...பண்டு நாம் செய்த பாவங்கள் தீர்ப்பார் பாம்புர நன்னகராரே" எனச் சம்பந்தர் இங்குப் பாடியிருப்பது போன்று இதனைப் பணிசெய்வார் அவர்தம் பாவங்கள் நீங்கப் பெறுவர். இப்பதி, மாயவரம்-திருவாரூர்ப் புகைவண்டிப் பாதையின் இடையில் உள்ள பேரளம் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் 2 கல் தூரத்தில் உள்ளது.

20. திருக்கருக்குடி : இப்பதி கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 3 கல் தூரத்தில் உள்ளது. மருதநல்லூர் என வழங்கப்படுவது. "கனைகடல் வையகந்தொழும் கருக்குடி" எனச் சம்பந்தரால் பாடப்பெற்ற இக்கோயில் வையத்தோர் கண்ணிலும், ஏன், அவ்வூரினர் கண்ணிலும் படாமல் ஊர்ப்புறத்தே சிதைந்து வருகின்றது. சுவாமி, அம்மன் திருக்கோயில்கள் மீதிருந்த கலசங்கள் காண வில்லை. திருச்சுற்றினுள் மாடுகள் முதலியன மேய்ந்து வருகின்றன.

21. திருவிடைவாய் : இது, தஞ்சைக்குக் கிழக்கில் உள்ள குறடாச்சேரி புகைவண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கில் 2 கல் தூரத்தில் உள்ளது. இத்தொல்பதி இக் காலச் சைவ மக்களுக்கு ஓர் அரும்பெரும் புதையலாகக் கைக்கு எட்டியுள்ளது. ஆனல் "கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை" என்பதுபோல், இக்கோயில் இன்னும் சில ஆண்டுகட்குள் அழிந்துவிடும் நிலையில் உள்ளது. பல் லாண்டுகளாகத் தேவாரம் பெருத பதி என ஒதுங்கி நின்ற இப்பதி, சில ஆண்டுகட்கு முன் கல்வெட்டு ஆராய்ச்சியின் பயனுய், சம்பந்தர் தேவாரம் உடையதென இக்கோயில்

*காலையில் குடந்தை நாகேச்சரம், மாத்தியானம் திருநாகேச்சரம், மாலையில் திருப்பாம்புரம், அத்தயாமத்தில் நாகைக்காரோணம் (நாகைப்பட்டினம்).

கல்வெட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இது "மாறில் பெருஞ் செல்வம் மலிகின்றவாய்" எனப் புகழப்பெற்றது. சுவாமி அம்மை திருக்கோயில்களைத் தவிர்த்த ஏனைய பாகங்கள் தரைமட்டமாயின. எஞ்சிய இக்கோயில்களின் மீது முளைத்துள்ள மரங்கள் இவற்றினைத் தகர்த்து வருகின்றன.

இதுவரை கூறியன போன்ற நிலையில் பாடற்பதிகள் இன்னும் பலப்பல இருக்கின்றன. அடியேனால் காணப்பட்டவையே* இதுவரை கூறியவைகளாகும். இவையேயன்றி இவற்றின் பெருமைக்கு அடுத்துவிளங்கும் தேவார வைப்புத் தலக்கோயில்களும், வரலாற்றுத் தொடர்புடைய கோயில்களும் எண்ணிறந்தன பல சிதைவுற்று வரும் நிலையில் உள்ளன.

இவ்வாறு பல கோயில்கள் சிதைவுற்ற காரணத்தால் அங்கிருந்த அழகிய பல திருஉருவங்கள் பலவிடங்களில் எல்லைக்கற்களாகவும், ஆற்றுத்துறையில் துணி ஒலிக்கும் கற்களாகவும் பல இன்னும் பகரொணு இழிநிலையிலும் காண உள்ளன. இத்தகையன சோணாட்டிலும் பிற இடங்களிலும் பலவுள.

குறைபணி: சில திருக்கோயில்களைத் திருப்பணி செய்யப் புகுந்தோர் அதன் முழுப்பொறுப்பையும் உணராதோ, அல்லது இடையில் ஏற்பட்ட வேறுபல காரணத்தாலோ, அவற்றின் முழுப்பகுதிகளையும் தகர்த்துப் பணி செய்து, எடுத்த பணியை முடிக்காது குறைபணியாய் விட்டுள்ளனர். இத்தகையன சில உள்ளன. அவற்றுள் திரு அவளிவணல்லூர்*, திருஇன்னம்பர்† முதலிய பாடற் பதிகளும் பிறவும் ஆகும்.

---

*அடியேன் 1942ல் கண்ட நிலை இவையாகும்.

†தஞ்சைக்குக் கிழக்கில் உள்ள அம்மாபேட்டைக்கு வடக்கில் உள்ளது.

‡கும்பகோணத்திற்கு வடமேற்கில் இன்னம்பூர் என வழங்கப் படுவது.

இன்னும் சில சிதைவுற்ற கோயில்களைத் திருப்பணி புரியும் விருப்பொடு சென்ற திருப்பணிச் செல்வர்களை, அக்கோயிலுக்கு உரிமைகொண்டாடியோர் எங்கு அத்திருப் பணியால் கோயில் பார்வைக்குச் சீர்பட்டுத் தங்கள் உரிமை முதலியன போய்விடுமோ என அஞ்சியோ வேறு எக்கார ணத்தாலோ திருப்பணி செய்யவிடாது முன் தடுத்துள் ளனர். சிலர் அவர்களது திருப்பணி இடையிலும் இடை யூறு செய்துள்ளனர் என்பர். இவைபோன்ற காரணத்தா லும், பிறவற்றாலும் இப்போது திருப்பணி செய்ய எவரும் முன்வாவில்லையே என ஏங்கவேண்டியதா யுள்ளது.

திருவிழாக்கள் பல பல இடத்தும் இப்போது நின்று விட்ட காரணத்தால் அவற்றின் தொடர்புள்ள இடங்கள், தேர்நிலை மண்டபங்கள், பல பெருமண்டபங்கள் சிதைந்து அப்பகுதிகளுள் சில பாழீனமாய்ப் பலஇடத்தும் உள்ளன.

மிகக் குறிப்பாய்க் கூறுமிடத்து மிகப் மிகப் பெருங் கோயிலாகிய, கங்கைகொண்ட சோளேச்சரத்துப் பெருங் கோயிலது கற்கள் பலவும் சென்ற நூற்றாண்டில் அரசாங்கத் தாரால் அணைக்கரையில் கொள்ளிடத்து அணைக்குப் பயன் படுத்தப்பட்டன. இதனைப் பின்பற்றி வேறு கோயில் களும் பயனுகு நிலைக்கு வாராது, அக்காலத்தில் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்டு கர்சனால் பிறப்பிக்கப் பட்ட 'பழங் கட்டிடங்களைப் பாதுகாக்கும் சட்டம்' இவற்றைப் பாதுகாத்தது.

இதுவன்றி, இதுபோன்ற இடங்கள் பல, சமயப்புறம் பானோர் குடியிருப்பாயும், வேறுபலவாயும் அவற்றின் பெருமையைச் சிதைக்கின்றன. இப்பாதுகாப்புச் சட்டத்தை இவ்விந்திய அரசாங்கமாவது கவனிக்கவேண்டும்.

திருக்குளங்கள்

மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றினுள் தீர்த்தம் நிறைந்த திருக்குளங்களது நிலை பெரும்பாலும் வருந்தத் தக்க நிலையில்தான் எங்கும் உள்ளன. இறைவனே தீர்த்த

வடிவில் உள்ளான் என, " ...சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே... " என அப்பரடிகள் *அருளுகின்றார். இக்காலத் தமிழ்மக்கள் இதை உணரவில்லையே.

தற்காலத்தில் இத்திருக்குளங்களிற் சில நீராடியோரது உடற்பிணியையும் போக்கும் உடன்பிறவா மருந்தாக விளங்குகின்றன. ஆனால், பெரும்பான்மையான திருக் குளங்கள் பாய்கால் வடிகால் இன்றியும், சுற்றி மதில்கள் இடிந்து விழுந்தமையால் சுற்றிப் பெய்த மழைநீர் அசுத்தத் தோடு வந்து விழும் நிலையிலும் உள்ளன. இவற்றின் நீரைத் தொடக்கூட நீதியின்றி, பச்சைக்கருப்பு வண்ணமடைந்த, நீராடியோரது பாசத்தைப் போக்க இருப்பவை, பாசம் பிடிக்கத் தக்கவையாய் உள்ளன. இன்னும் பல குளங்கள் தூர்க்கப்பட்டு வருகின்றன.

பிறவிக்குருடராகிய 'தண்டியடிகள்' திருவாரூர்க்குளத் தினைச் சீர்படுத்திக் கண்கள் பெற்றார் என்பதையும், சிவ ஞானபோதத்தினை மொழிந்த மெய்கண்டார் திருவெண் காட்டு முக்குளநீர் மூழ்கியதால் அவதரித்தார் என்பதை யும் இன்னும் பல தீர்த்தங்களில் பலர் மூழ்கிக் குறைநீங்கிப் பெற்றதையும் வரலாற்றிலிருந்து அறிந்துவருகிறோம். இக் காலத்தும் அவ்வழியைப் பின்பற்றி, பற்பல விழாக்காலத்தே நம் குறை தீர நாம் புனிதநீரில் குமரி முதல் காசிவரை சென்று நீராடிக் குறைநீங்கி வருகின்றோம்.

ஆனால், இக்காலத்தில் அநேக இடங்களில் இத்தகைய திருக்குளங்கள் வீண் எனத் தூர்த்துப் பூங்கா (Park) அமைத்து விட்டனர்; மேலும் அமைக்கவும் ஏற்பாடு செய் கின்றனர். ஆதலின் இவ்வாறு இவை ஆகாது, சுகாதார வசதியுடன் பக்தர்களுக்குப் பயன்படக் கோயில் திருத்த வேலையுடன் திருக்குளத் திருப்பணியையும் இணைத்தல் வேண்டும். இதைச் சுகாதார இலக்காவின் முதல் வேலை யாகவே குறிக்கொள்ளல் பொது நன்மைக்குப் பெரிதும் அடுத்ததாயிருக்கும்.

---

*திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம்.

" அடியார்களது வரலாற்று இடங்கள் "

நம் திருக்கோயில்களுடைய சிறப்புகள் பலவற்றினும் தலைசிறந்து விளங்குவன அடியார்களுடைய பாடல் பெற்ற வைகளே. இத்தகைய அடியார்கள் பிறந்து வாழ்ந்த வரலாற்றுத் தொடர்புடைய இடங்களில் உள்ள பல மண்ட பங்களில், நினைவுச் சின்னங்கள் யாவும் பெருமையின்றி அழிந்தும், வேறு வகை இடங்களாக மாறியும் உள்ளன.

பரசமய கோளரியாகிய நம் திருஞானசம்பந்தப் பெரு மான் அவதரித்த வீடு, சீகாழி மேலக்கோபுரவாயிலின் மேற் புறமுள்ள கிழமேல் வீதியின் தென் சாகநடுவில் உள்ளது. அது ஒரு குடியிருப்பு வீடாக இன்றும் உள்ளது. இன்னும் சம்பந்தர் பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெற்றபின் தங்கிய மடமும் இவரது வரலாற்று இடங்கள் சின்னங்கள் பலவும் சிதைந்தும் மறைந்தும் வருகின்றன.

அப்பரடிகளே கட்டிய திருமடம் ஒன்று திருப்பூந் துருத்தியில் மிக்க இழிநிலையில் உள்ளது. " ...தம்பிரானுர் அருள்பெற்று திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஆங் கோன்று அமைத்தார் " என்று சேக்கிழார் பெருமான் இது பற்றிச் சிறப்பிக்கின்ருர். இது தகர்ந்து வீழ்வதினும் இங்குள்ள மக்களால் இழிந்தவகையில் பயன்படுதல் மிகமிக வருந்தத்தக்கது. இம்மடத்தின் அமைப்பை நேரில் காணின், அது நம்மை அப்பரது காலத்திற்குக் கொண்டுவிடுகிறது. இங்கு இருந்த அப்பரது அமர்ந்தகோலத் திருஉரு அம்மடத் தின் இழிநிலைகண்டு வருந்தியதால் திருக்கோயிலின் உள்ளே சென்றுள்ளது.

அமர்நீதியாரால் முன்பு திருநல்லூரில் கட்டப்பட்டு பின்பு புழக்கமின்றி அலர் அடித்தும், உறுதியுடன் நின்று நமக்கு மிக்க பழம் பொருளாய் இருந்த திருமடம் அண்மை யில் இடித்துத் தள்ளப்பட்டது.

---

*"...வெண்காட்டு முக்குள நீர்தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே" சம்பந்தர் பாடல்.

இவை போன்று வரலாற்றுத் தொடர்புடைய இடங்கள் பல எத்தனையோ உள்ளன. இதுபோல் சமயத்தொடர்புடைய பழமையான இடங்கள் பிற சமயத்தவருக்கு இருக்குமாயின் (உதாரணமாய் கிருஸ்து பிறந்த இடம் அல்லது அவர் தங்கியது என ஒன்றிருந்தால்) இக்காலக் கிருஸ்தவ மக்கள் அதனைப் பொற்றகட்டால் கட்டுவர்.

நம் சமய அடியவர் பெருமக்கள் பெயரால் பல இடங்களில் எத்தனையோ மடங்களைப் புதிதாய்க் கட்டுகின்றனர். அவற்றுள் வரும் பயன், புகழைவிட இவற்றைப் பணி செய்யின் எவ்வளவு அவர்களுக்கேயன்றி மக்கட்கும் சமயத்திற்கும் நன்மையும் புகழும் விளையும்.

திருவாரூரில் பரவையாருடன் சுந்தரர் வாழ்ந்த இடம் 'பரவையார் மாளிகை' எனச் சிறப்புடன் விளங்குவது போன்றும், இன்னும் கம்பர், தியாகராசர், பாரதியார் முதலியோர்களுக்கு அவர்களது ஊரில் நினைவு இடங்கள் அமைப்பது போன்றும், நம் சம்பந்தர் இல்லம், திருப்பூந்துருத்தி அப்பர் திருமடம், இன்னும் மற்றைய அடியவர்களது வரலாற்று இடங்கள் யாவும் சிறப்புறவேண்டும்.

சமய போதனைப் பாடசாலைகள்

நம் சமயப் பெருமையினைப் போதிக்கும் சில கல்லூரிகளும், வேதபாடசாலைகள் பலவும் நம் திருக்கோயில்கள் பலவற்றுள் முன்னர் நடந்துவந்ததைக் கல்வெட்டால் அறிகின்றோம். இதுவன்றி அண்மையில் செட்டிநாட்டுத் தனவணிகப் பெருமக்களும், பிற செல்வர்களும் வேதபாடசாலைகள் திருமுறைப் பாடசாலைகளைப் புதிதாய்ப் பல இடத்தும் கட்டி அதில் பயிலும் மாணவர்களுக்கு இலவச உண்டியும் உணவும் அளித்துவந்தனர். இவ்வகை இடங்கள் பல இப்போது மூடப்பட்டுள்ளன. பல இடங்கள் குடியிருப்பாயும் மாறியுள்ளன. இதுவன்றி, ஒரு சில இடங்களில் நடைபெறும் நம் திருமுறைப்பாடசாலைகளில் பழமையான பண் முறையில் திருமுறைகள் ஓதப்படுவதில்லை,

நவீன மெட்டுகளில் போதிக்கப்படுகின்றன. இது போன்ற காரணத்தால்தான் மக்கட்கு நம் சமய வரலாறு முதலியன உணர இயலவில்லை, விபரீத போதனைக்குள்ளாகின்றனர்.

அழிந்துவரும் நந்தனவனங்கள்

இக்காலத்தில் பல இடத்தும் பல வூர் வகைகளைக் காணவும், பெயரளவில்கூடக் கேட்கமுடியாதபடி, பல செடிகள் மரங்கள் முதலியன அழிந்து வருகின்றன. பல தலங்களில் தலவிருட்சங்கள்கூட இல்லாது போயின. வேத பாடசாலைகளைப் பிற்காலத்தில் நிர்மாணித்து வந்ததுபோல், நந்தவனங்களையும் வைத்துக்காத்துவந்தனர். பல பெருமக்களும், கோயிலார்களும், இப்போதே இவற்றைப் பேணாது நிற்கின்றனர். இனியும் வாளா இருப்பரேல், இன்னும் சில ஆண்டுகட்குப்பின் மூர்த்திகட்கு என்றும் வாடாமலராய்க் காகிதம், கெட்டி முதலியவற்றாலான பூக்களைத்தான் அணிவிக்க* நேரும்.

இதுவரை கூறிய நம் திருக்கோயில்கள் முதலிய சமய நிலையங்களின் சிதைவுற்ற நிலையால் நம் சமயமும், நாமும் மிக்க தாழ்வுடையவர்களாகிறோம். நம் முன்னோர் படைத்த சீரிய கட்டிடங்களும் சிற்பங்களும் நம் தலைமுறையில் அழிந்தன என்று நம் பின்னோர்களால் ஏசப்பெறுவோம். இக்குறைபாடு மட்டுமேயன்றி, இந்நிலைமை மக்களுக்குள் சமய நம்பிக்கையைக் குறைத்து நம் சமயத்தின் அடிப்படையைத் தகர்க்கும் பழைய வரலாறுகளைப் பொய்ப்பிக்கும், இன்னும் எண்ணற்ற குறைகட்கும் இடமாகி நம் நாட்டுக்கே பெருங் கேடுகளைத் திருமூலர் கூறுவதுபோன்று விளைத்துவர வது வாகும்.

இத்தகைய பண்டைப்புகழும், சிற்பச்சிறப்பும், செல்வமும் நிறைந்த சமய நிலையங்கள் பிற மதத்தவருக்கு வாய்த்திருக்குமாயின் அவர்கள் இவற்றை எத்தகைய நிலையில்

---

*இப்போதுகூட சில இடங்களில் நறுமண மலருடன் இவற்றையும் இணைந்து அணிவிக்கின்றனர்.

வைத்திருப்பார்கள் ! பிறநாட்டிலிருந்து வந்து நம் நாட்டில் தத்தம் சமயத்தையும், நிலையங்களையும் எத்தகைய உன்னத நிலையில் வைத்துள்ளனர் என்பதை நாம் உணர்ந்து பின்பற்றல் வேண்டும்.

பண்டைத் தமிழ்மன்னர்கள் கட்டிய கோயில்களில் சிதைவுற்றவற்றைப் பண்டுபோல் மீண்டும் புதுப்பித்த பெரும்பணியில் சிறிது காலத்துக்கு முன்வரை, இலட்சக் கணக்கில் செலவிட்டுப் புதுப்பித்தும், திருநந்தனவனம், வேதாகமத் திருமுறைப் பாடசாலைகள், பசுமடங்கள் முதலியன வைத்தும் நம் சமயத்துக்குப் பெரும் பணியாற்றியவர்கள் நம் தென்னுட்டில் உள்ள தனவணிகப் பெருமக்கள் (நாட்டுக்கோட்டை செட்டிமார்கள்) ஆவார்கள். அவர்கள் இதுவரை இப்பணியை மேற்கொள்ளாதிருந்திருப்பின், இப்போது யாண்டும் சிதைவுற்ற கோயில்களே காணப்படும். இத்தகைய பணிகளில் அளவின்றி இத் தனவணிகப் பெருமக்கள் செலவழித்ததால் அன்றோ குபேரனை ஒத்த பெருஞ் செல்வர்களாகத் திகழ்ந்தனர் ? ஆதலின் மீண்டும் அவர்கள் இப்பணியில் தங்கள் கவனத்தைச் செலுத்தி இக்கோயில்களைச் சிறப்புறச் செய்வார்களாயின் இப்போது அவர்களுக்குற்ற குறைகள் யாவும் நீங்கப்பெற்று, சிவனருளால் முன்னிலும் பெருஞ்செல்வராய்ச் சிறந்து வாழ்வார்கள் என்பது திண்ணமாகும்.

ஆனல் முன்போல் பெருஞ்செலவில் புதுக்க இக்கால நிலை இடந்தாதிருக்கலாம், மனம்வராதிருக்கலாம். முன் பல இலட்சக்கணக்கில் செலவிட்டதை இப்போது நூற்றுக்கணக்கில் ஒருவரேயோ அல்லது பலர் சேர்ந்தோ செலவிட்டுச் சமயநிலையங்களுக்குச் சுபமோடு அழியாமல் பாதுகாத்தல் கூடப் போதுமானதாகும். உயர்ந்த நெடுநிலைக் கோபுரங்களையும், பெருமண்டபங்களையும், பளபளப்பான நுண்ணிய வேலைப்பாடமைந்த சிற்பங்களையும் இன்று இக்கோயில்கள் எதிர்பார்க்கவில்லை. பலநாள்பட்டினி கிடப்பவனுக்கு ஓரளவு புளித்தகூழ் கிடைப்பின் அவன் அடையும் பயனைப்போன்றும், பெருங் குடித்தனக்காரன் ஒருவன் குடியிருக்க

வீடின்றித் தவிக்கும்போது ஓர் கூரைவீடு, அல்லது ஓர் வீட்டின் சிறுபகுதியேனும் கிடைப்பின் அவனுக்கு ஏற்படும் இன்பநிலையினை ஒப்ப, இக்கோயில்களுக்கு மிக முக்கியமாய்ச் சுற்றிலும் சிறிதுயரமுள்ள திருமதில்களும், சுவாமி அம்மையாருக்கு மட்டும் பதுமைகள் முதலிய விசித்திர வேலைப்பாடற்ற விதானங்களும், சுற்றுமூர்த்திகட்குப் பெரிய மாடங்களுமிருந்தால் போதுமானது.

இவ்வாறு செய்வதற்கு அதிகப் பொருள் தேவையில்லை. முன் ஓர் பதுமைக்குச் செலவிட்ட பணம் ஒரு மூர்த்திக்குக் கோயிலாக்கிவிடும். ஒரு பெருங் கோயிலது பெருவிழாவின் ஒரு நாள் செலவுத் தொகை இதற்குப் போதுமானது. (சிலசமயங்களில் இவ் விழாக்களுக்குப் பெருஞ் செலவில் தயாரித்த பொருள்கள் முதலியன பெரு மழையால் தடையாகி வீணாகிவிடுவதுண்டு. அந்த நஷ்டம் இதில் இல்லை). புகைவண்டியிலும், தெருக்களிலும் பிச்சைக்காரன் 'உங்கள் வாய்க்கு வெற்றிலைப்பாக்கு (செலவுத்தொகை) அது என் வயிற்றுக்கு ஒருவேளை சோறு" என்று கதறுவதை அடிக்கடி கேட்கிறோம். அதுபோல ஒருநாள் விழாச் செலவு இக் கோயில்களது சிக்கனப் பணிக்குப் போதுமானதாகும். அதனைப் புரிந்தார்க்கும் அது பெருநன்மை தரவல்லதென்பதை உணர வேண்டும்.

தற்காலத்தில் சில செல்வர்கள் பெருஞ் செலவில் புதுக்கோயில்களையும், பல சமய நிலையங்களையும் கட்டுகின்கின்றனர். இவ்வாறு கட்டுவதின் பயனைவிட, இக் கிலமான பழங்கோயில்களையும் சமய நிலையங்களையும் பழுது பார்ப்பதால், இவற்றை முதன் முதற் கட்டியோர் அடைந்த பயனினும் அதிகம் அடைவார்கள் என்பதை,

" மாதவர் மடங்க ளாதி வாதன்மந் திரங்க ளாதி
நாதமா லிங்க மாதி நவினிபுட் கரணி யாதி
சேதமுற் றிடின்முன் போலச் செய்துளோர்க் குறுபலன் தான்
ஓதுமுன் செய்து ளோரில் ஆயிரம் துணித மோங்கும் "

எனச் சிவபுண்ணியத் தெளிவு கூறுகின்றது. (தொடரும்)

செய்தித் திரட்டு

5, 12, 19. அக்டோபர் - 1952. திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையில் புலவர்-அ. நடேச முதலியார் அவர்கள் தாயுமானவர் பாடல் விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

12 - 10 - 52 கோவைத் தமிழ்ச் சங்கம். திரு அருணாசல நாட்டார் தலைமையில் மாணிக்கவாசகனார் முதலியோர்கள் "சங்க இலக்கியங்கள்", "திருவிடைமருதூர் உலா" என்ற பொருள்கள்பற்றிப் பேசினார்கள்.

19 - 10 - 52 முதல் 26 - 10 - 52 வரை கோவை இரத்தினவிநாயகர் ஆலயத்தில் கந்தர் சஷ்டி விழா நடைபெற்றது. கந்தபுராணச் சரிதையை முறையாக பல புலவர்கள் வகுத்துக்கொண்டு பேசினார்கள்.

5 - 10 - 52. மறைமலை அடிகள் திருவிழா. அறநெறிக் கழகத்தார்கள் ஆதரவில் புலவர் நடேச கவுண்டர், S. V. சுப்பிரமணியம், D. N. ஆறுமுகம் பிள்ளை என்பவர்கள் கோவை கிழார் தலைமையில் பேசினார்கள்.

16 - 10 - 52. ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி நிறுவும் பொருட்டுக் கோவைப் பெரியார்கள் தீர்மானித்தார்கள்.

18 - 10 - 52. டாக்டர். R. K. சண்முகம் செட்டியார் மணிவிழா, பேரூர் பட்டீசுரசுவாமி கோயிலில் திருமுறை இன்னிசையுடன் நடைபெற்றது. அப்போது செந்தமிழ்க் கல்லூரியைப் பற்றிப் பாராட்டு நடந்தது. மாலை கோபால் பார்க்கில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. "மணிவிழா மலர்" என்ற அழகிய நூல் வெளியிடப்பட்டது.

ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபை, இராயப்பேட்டை: மேற்படி சபையில் மகா கந்த சஷ்டியை முன்னிட்டு, 19-10-52 முதல் 26-10-52 வரை ஒவ்வொரு நாளும் இரவு 7 மணி முதல் 8-30 மணி வரை திரு. த. ந. கோபாலசர்மா, T. M. கிருஷ்ணசாமி அய்யர், N. R. சுந்தரராசன். B.O.L., K. பாலசுப்பிரமணிய அய்யர், க. சோமசுந்தரம் செட்டியார், கி. வா. ஜகந்நாதன் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இன்னிசைப்புலவர் கு. புண்ணியகோட்டி அவர்களின் இன்னிசையும் 25-10-52 அன்று நடைபெற்றது.

சமாஜ வெளியீடுகள்

		ரூ.	அ.
பெரியபுராணம்—அகாதியுடன்	...	3	0
நாலாயிர திவ்ய பிரபந்தம்	...	3	0
சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன்	...	1	0
திருவாசகம் மூலம்	...	0	4
திருப்போரூர்ச் சந்நிதிமுறை	....	0	12
திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு		7	0
சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற் பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற் றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம்			
துகளறுபோதம் (மூலம்)	...	0	8
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல.	...	0	2

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்) ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணா வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.